பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 16 ஞாயிற்றுக்கிழமை 01.09.2024 கதிர் 298

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தலையொட்டி தெற்கில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியலாளர்களும் குத்துக்கரணம் அடிக்கிறார்கள் என்றால் வடக்கில் அரசியல்வாதிகள் கட்சிக்குள்ளேயே குத்துக்கரணம் அடிக்கிறார்கள். அவர்களைப் 2

# போராட்டம் மற்றும் எதிர்ப்பு மூலமே எமது இருப்பை தக்கவைக்க முடியும்

## விக்னேஸ்வரன் எம்.பி. அறிக்கை

போராட்டம் மற்றும் எமது எதிர்ப்பு ஆகியவற்றின் மூலமே நாம் எமது உரிமைகளை பாதுகாப்பதற்கும் எமது இருப்பினைதக்கவைத்துக்கொள்வதற்கும் முடியும் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஒரு வேண்டுகோள் என்ற தலைப்பில் அவர் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச ஆகிய இருவரினதும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் கடந்த வாரம் வெளியாகியுள்ளன. குறித்த இருவரினதும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் நாம் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை இம்முறை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தியிருப்பதன் தேவை மற்றும் அது தொடர்பிலான எமது சரியான முடிவு ஆகியவற்றை எடுத்துக்காட்டுகின்றன.

சுருக்கமாகச் சொல்வதானால் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகிய இருவருமே தற்போதைய அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்படும் என்று 2

## நல்லூரில் இன்று தேர்



நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தின் சப்பரத் திருவிழா நேற்று நடைபெற்றது. இன்று காலை தேர் உற்சவம் இடம்பெறும்.

நல்லூர் கந்தனின் மகோற்சவத்தின் 23ஆம் திருவிழாவான நேற்று மாலை நடைபெற்ற வசந்தமண்டப பூஜையைத் தொடர்ந்து பாரம்பரிய பறை முழங்க முருகப்பெருமான் வள்ளி தெய்வானையுடன் சப்பரத்தில் எழுந்தருளி வீதியுலா வந்தார்.

நல்லூர் மகோற்சவ திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும். இதனைக் காண பல லட்சக்கணக்கான மக்கள் இலங்கையின் பல பகுதிகளில் இருந்தும் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நாளை திங்கட்கிழமை தீர்த்த திருவிழாவும் நடைபெற வுள்ளது.



## யாழ். வந்தார் சஜித் பிரேமதாச துணவியில் நேற்றுப் பரப்புரை

எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள்சக்திஜனாதிபதிவேட்பாளருமான சஜித்பிரேமதாஸநேற்றுயாழ்ப்பாணம் வந்தார். இன்றும் அவர் இங்கு தங்கியிருப்பார். வடக்கில் அவரது முதலாவது பரப்புரைக் கூட்டம் நேற்று துணவியில் இடம்பெற்றது.

போரில் உயிர்நீத்த உறவுகளுக்கு இரண்டு நிமிட அஞ்சலி செலுத்தப்பட்ட பின்னர் கூட்டம் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து விருந்தினர்களது உரைகள் இடம்பெற்றன.

இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஐக்கிய மக்கள் சக்தியின் வடக்கு மாகாண இணைப்பாளர் உமாச்சந்திரா 8

## ஜனாதிபதியாக சஜித் வருவதே இறைவன் செய்திருக்கும் நியதி

### பொத்துவில் தொகுதி அமைப்பாளர் தெரிவிப்பு

செப்டம்பர் 22 ஜனாதிபதியாக சஜித் பிரேமதாச வருவதை எவராலும் தடுக்க முடியாது. காரணம் இறைவனால் செய்ப்பட்ட நியதி அது என்றார் ஐக்கிய மக்கள் சக்தியின் பொத்துவில்தொகுதிஇணைஅமைப்பாளர் வினோகாந்.

'வெல்லும் சஜீத்' என்ற தொனிப்பொருளில் ஐக்கிய மக்கள்சக்தியின் அம்பாறை மாவட்ட பொத்துவில் தொகுதியில் நேற்று தீவிர பரப்புரைப் பணிகள் இடம்பெற்றன. தொகுதி இணையமைப்பாளரும் கிழக்கு மாகாண ஐக்கிய மக்கள் சக்தியின் கல்வி அபிவிருத்திக்குழு இணைப்பாளருமான வெள்ளையன் வினோகாந் தலைமையில் சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வளத்தாப்பிட்டி, புதிய வளத்தாப்பிட்டி, இஸ்மாயில் புரம் உள்ளிட்ட கிராமங்களில் இந்தப் பரப்புரை நடவடிக்கை இடம்பெற்றது. அங்கு செய்தியாளர்களிடம் பேசிய வினோகாந் தெரிவித்ததாவது:

நாடளாவிய ரீதியாக ஜனாதிபதி தேர்தல் 8

## நல்லூர் தீர்த்தத்திற்கு பாடசாலைகள் கேட்டால் விடுமுறை கிடைக்கும்

நல்லூர் கந்தசுவாமி ஆலய தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட பாடசாலைகள் அனுமதி கோரினால் விடுமுறை வழங்கப்படும் என வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார் என்று பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

யாழ். நல்லூர் தீர்த்த திருவிழாவை முன்னிட்டு அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமும் ஆளுநர் சாள்ஸ் அவர்களிடமும் செப்டெம்பர் 2 திங்கட்கிழமை விடுமுறை வழங்குமாறு அவர் கோரிக்கை விடுத்திருந்தார். நல்லூர் கந்தனுக்கு 25 நாட்கள் விரதம் இருந்து பூர்த்தி செய்பவர்கள் தமது விரதத்தை முடிப்பதற்கு வசதியாக 8

## சர்வதேச நாடுகளில் கடன்களைப் பெற்றுவிட்டு நாட்டு வளங்களை அடாத்தாக விற்பவர் ரணில்

### ஐக்கிய மக்கள் சக்தி கடும் சாடல்

(ஹஸ்பர் ஏ.எச்)

சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச நாடுகளிடம் கடன்களைப் பெற்று கடன் சுமையை அதிகரித்துவிட்டு, அதற்குப்பதிலாக நாட்டின் வளங்களை அடாத்தாக விற்கும் ஒரு தலைவரே ரணில் விக்கிரமசிங்க என்று ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட கொள்கை பரப்புச் செயலாளர் எம் எம் மஹ்தி தெரிவித்தார்.

கிண்ணியாவில் உள்ள 8

### தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கும்

## திருமலை அரசியலாளர்களின் முடிவை ஓடிச் சென்று வரவேற்ற செல்வம் எம்.பி.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த அரசியலாளர்களின் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கும் முடிவு வரவேற்கத்தக்கது என தமிழீழ விடுதலை இயக்கத்தின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் 2

## ஜனநாயகத்தை மதிப்போர் ரணிலுக்கே வாக்களிக்குக

### முன்னாள் அமைச்சர் பஷீர் அறிக்கை

இலங்கை மக்கள் ஜனநாயகத்தை மதிப்பவர்களாக இருந்தால் அடுத்த ஐந்து வருடங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே கொடுத்து பார்க்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

இது தொடர்பாக இவர் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனநாயக நாடுகளில் முதல் பதவி காலத்துக்கு தெரிவு செய்யப்படுகின்ற ஜனாதிபதியின் செயற்பாடுகள் திருப்தியாகவும், நம்பிக்கையை ஏற்படுத்துகின்ற வகையில் அமைந்தால் மக்கள் அவருக்கு மீண்டும் ஒரு பதவி காலத்தை வழங்குவார்கள்.

சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளை முன்னுதாரணமாக கொள்ள முடியும். ஆனால் எமது நாட்டில் ஏற்பட்ட நிலைமை வித்தியாசமானது. ஐந்தாண்டுகளுக்கு ஆட்சி 8

## ரிஷாத் யார் பக்கம்? வெடித்தது சர்ச்சை



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் ஐக்கிய மக்கள் சக்தித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஜனாதிபதித் 8

## விக்கிரமசிங்க தோற்றால் முழு நாடுமே தோற்கும்

### இப்படிச் சொல்கிறார் ராமேஸ்வரன் எம்.பி.

(க.கிஷாந்தன்)

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். சிலவேளை ரணில் 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தாலும் இவர்கள் எல்லாம் மக்களின் பிரதிநிதிகளாகி தமிழர்களை வழிநடத்துவார்கள் என்றால் தமிழர்களின் தலைவிதி என்னாகுமோ என்று நினைக்கையில் நெஞ்சம் பதறுகின்றது.

தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன் இப்படிக் கட்சிக்குள்ளேயே குத்துக்கரணம் அடித்த ஆகக் கடைசி நபர். அவர் ஓரிரு தினங்களுக்கு முன்னர் ஒரு கூட்டம் நடத்தினார். அந்தக் கூட்டம் அங்கிருந்த பிரதேசசபைகளின் முன்னாள் உறுப்பினர்களுடனான கூட்டம். அதில் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பாகப் பேசப்பட்டது. கூட்டம் முடிந்ததும் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பது என்று தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக்கிளை ஒரு முடிவை எடுத்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் குதாசனும் சேர்ந்துதான் இந்த அறிவிப்பைச் செய்தார். பின்னர் நேற்று ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனையும் சந்தித்துப் பேசினார். அதன் பின்னர் கட்சிகளின் ஒற்றுமை பற்றியெல்லாம் வகுப்பெடுத்திருக்கிறார்.

திருகோணமலையில் உண்மையில் என்ன கூட்டம் நடந்தது என்பதை அந்த மாவட்டக் கிளையின் உப தலைவர் விளக்கியிருக்கிறார்.

"இன்றைய தினம் முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க மாவட்ட தலைவர் குகதாசன் ஐயாவின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அதில் வருகை தந்த உறுப்பினர்கள் பொதுவேட்பாளர்களுக்கு ஆதரவு கொடுப்பதாக தங்களுடைய கருத்தினை மத்தியகுழுக்கு தெரிவிக்குமாறு கூறி இருந்தார்கள் ஆனால் சில ஊடகங்கள் திருமலை மாவட்டம் முழுவதும் ஆதரவு வழங்குவதாக பொய்யான செய்தியினை தெரிவித்திருக்கின்றார்கள் .உண்மையிலே எமது மாவட்டக்கிளை இன்னும் யாரை ஆதரிப்பது என்று முடிவெடுக்கவில்லை. கட்சி என்ன முடிவு எடுக்கின்றதோ அதுவே மாவட்டத்தின் முடிவுமாகும். பொய்யான வதந்திகளை பரப்பாதீர்கள். இதனால் எமது மாவட்ட மக்கள்தான் பாதிக்கபடுவார்கள்'' என்கிறார் அவர்.

குணம் அறிந்துதான் குதிரைக்குக் கொம்பு கொடுக்கால் விட்டாரோ சம்பந்தன் என்று இப்போது எண்ணத் தோன்றுகின்றது. ஆனாலும் என்ன செய்வது எல்லாக் குதிரைகளையும் கொண்டு வந்தவரே அவர்தான் என்பதை எங்கு போய்ச் சொல்லியழுவது.

கடந்த இரு தடவைகளாக நடந்த தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டங்களில் தமிழ் பொது வேட்பாளருக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்தவர் குகதாசன். அதுவொரு வேண்டத்தகாத வேலை என்றவர், இப்போது உறுப்பினர்களின் வேண்டுகோள் என்னால் எதுவும் செய்யமுடியவில்லை என்று சமாளிக்கப் பார்க்கிறார். கட்சிக்குள்ளேயே இன்று குத்துக்கரணம் அடிப்பவர், நாளை நாடாளுமன்றத் தேர்தலில் வென்றால் மற்றொரு வியாழேந்திரனாக மாட்டார் என்பதற்கு என்ன நிச்சயம். அப்படிச் சந்தேகிக்க எல்லா நியாயங்களும் உண்டு, ஏனெனில் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனதும் இரண்ட தடவைகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தனியே சென்று சந்தித்துப் பேசியவர் குகதாசன். அதன் பின்னர் தமிழ் பொது வேட்பாளர் ஆதரவு என்று அடித்துள்ளார் ஒரு குத்துக்கரணம்.

அதுபோன்று கிளிநொச்சி மாவட்டக்கிளைத் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சருமான குருகுலராஜாவும் முதலில் தமிழ் பொது வேட்பாளரை எதிர்த்து கட்சியின் மத்திய குழுவில் கருத்துத் தெரிவித்தார். பின்னர் கிளிநொச்சி ஜமீனிடம் திட்டு வாங்கியிருப்பாரோ என்னவோ அடுத்த மத்திய குழுக் கூட்டத்திலேயே தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவாகச் சில கருத்துக்கள் சொன்னார். இப்போது அவரது மாவட்டக் கிளையினரும் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பது என்று முடிவெடுத்திருக்கிறார்களாம்.

அவர்கள் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பதும் விடுவதும் அவர்களின் விருப்பு மற்றும் சுதந்திரத்திற்குரியது. ஆனால், இவர்கள் இப்படிக் கட்சிக்குள்ளேயே குத்துக்கரணம் அடிக்கும்போது, இவர்களை நம்பியா நாடாளுமன்றத் தேர்தலிலும் மாகாண சபைத் தேர்தலிலும் தேர்ந்தெடுப்பது என்பதுதான் எழும் கேள்வியே!

இந்தக் குத்துக்கரணங்களுக்கு மத்தியில் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இன்று வவுனியாவில் கூடுகின்றது. தமிழ் மக்களுக்குத் தந்தை செல்வா வழியில் தமிழ் அரசுக் கட்சி தலைமை தாங்கப் போகிறதா இல்லை மற்றைய கட்சிகளுக்குப் பின்னால் சென்று தன் சுயத்தை இழந்து அரசியல் களத்திலிருந்து அகலப் போகிறதா என்பது இன்று தெரிந்துவிடும். தமிழ் பொது வேட்பாளர் தொடர்பாக இன்றும் முடிவு எடுக்காமல் மத்தியகுழுக் கூட்டம் முடியுமாக இருந்தால் அது தமிழ் அரசுக் கட்சியின் சவப்பெட்டியில் அறையப்பட்ட முதல் ஆணியாகவே இருக்கும்.

2010இல் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் இவர்கள் எல்லோரையும் உதறி தனித்துச் செல்வது என்று முடிவெடுத்தது. அந்தத் தற்றுணிபுதான் இன்றும் அதனைத் தமிழர்களின் மாற்றுத் தலைமையாகவாவது நிலைநிறுத்தி வைத்திருக்கிறது. தமிழ் அரசுக் கட்சி தானே தமிழர்களின் தலைமகன் என்று சொல்லிக்கொண்டு என்ன செய்யப்போகிறது? மாவையருக்கும் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவேண்டிய தேவை இருப்பதால் கட்சியாவது மண்ணாவது என்று முடிவெடுப்பாரா அல்லது தந்தை செல்வாவின் வழியில் துணிந்து செல்வாரா என்பதை இன்று மாலைக்குள் பார்க்கலாம்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## போராட்டம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளார்கள். 13ஆவது திருத்த சட்டம் பொலிஸ், காணி மற்றும் நிதி ஏற்பாடுகளுடன் முழுமையாக அமுல்படுத்தப்படும் என்று இருவருமே உறுதியளிக்கவில்லை. இது அதிகார பகிர்வு தொடர்பில் அவர்களின் நிலைப்பாட்டை மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. புதிய அரசமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இருவரும் எந்தவிதமான விவரங்களும் இன்றி மொட்டையாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். புதிய அரசமைப்பில் தமிழ்தேசிய பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்படும் என்று எந்த யோசனைகளையும் இருவரும் துளியளவும் குறிப்பிடவில்லை. ஆகவே, அலுவலர்கள், பொலிஸ், காணி மற்றும் நிதி அதிகாரங்கள் பிடுங்கப்பட்டு தற்போது அரசமைப்பில் இருக்கும் பலமற்ற 13 ஆவது திருத்த சட்டத்தில் இருக்கும் அதிகாரங்களை ஒத்த அதிகாரப் பகிர்வே புதிய அரசமைப்பிலும் அவர்களின் யோசனையாக இருக்கும் என்பதில் எவரும் சந்தேகம் கொள்ள முடியாது.

இலங்கையின் அரசமைப்பு ஒற்றையாட்சிக்கு உட்பட்டது. அப்படியிருந்தும் அரசமைப்பின் ஒரு அங்கமான 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அதன் தொடக்க அதிகாரங்களுடன் இந்திய-இலங்கை உடன்படிக்கையின் படி அமுல்படுத்தப்படவேண்டும் என்பதையே நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்தோம். ஆனால், அதேநேரம் 13 ஆவது திருத்த சட்டம் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான நிரந்தமான ஒரு தீர்வு அல்ல என்றும் இணைந்த வடக்கு-கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வே வேண்டும் என்றும் எல்லா தமிழ்த் தேசிய கட்சிகளும் மிகத்தெளிவாக வலியுறுத்தி வந்துள்ளன.

அப்படியிருக்க, ஏற்கனவே நாட்டின் அரசமைப்பில் இருக்கும் 13ஆவது திருத்த சட்டத்தின் அற்பசொற்ப அதிகாரங்களை எமக்கு வழங்குவதாக தேர்தல் அறிக்கையில் குறிப்பிடுவதும் பொலிஸ் மற்றும் ஏனைய அதிகாரங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தின் ஊடாக முயற்சிக்கப்படும் என்று கூறுவதும் உங்களுக்கு 'கிள்ளிப்போடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்' என்று சொல்வதாகத்தான் இருக்கின்றது.

அத்துடன் ஏற்கனவே அரசமைப்பில் தற்போது இருக்கும் எமக்குரிய அதிகாரங்களை தாம் தருவோம் என்று தேர்தல் அறிக்கையில் இவர்கள் கூறுவதன் மூலம், 13ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் சட்டரீதியான ஜனநாயக ரீதியான உரிமை என்பதைக்கூட இவர்கள் இதுவரை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைத்தானே காட்டுகின்றது?

அநுரகுமார திசநாயக்க மற்றும் நாமல் ராஜபக்ஸ ஆகியோரின் தேர்தல் அறிக்கைகள் இன்னமும் வெளியாகவில்லை. ஆனால், தமிழ் மக்களுக்கு அர்த்தமுள்ள வகையில் அதிகாரங்களை பகிர்ந்தளிக்க நாம் தயாராக இல்லை என்ற செய்தியை அவர்கள் ஏற்கனவே தெளிவாக வெளிப்படுத்திவிட்டார்கள். வடக்கையும் கிழக்கையும் பிரிக்க நடவடிக்கை எடுத்தவர் அநுரகுமார. நாமல் இராஜபக்சவைப் பற்றி நாம் கவலைப்படத்தேவையில்லை. அவர் எந்தக் காலத்திலும் வெல்லப் போவதில்லை.

# இஸ்ரேலை இன்று எதிர்க்கும் அநுர நாளை தேன்நிலவு கொண்டாடுவார்

## எப்படி நம்புவது என்கிறார் இம்ரான் எம்.பி.

(ஹஸ்பர் ஏ.எச்)

மோடி ஆட்சியின் நிகழ்சி நிரலில் இந்தியாவுக்குச் சென்று வந்த ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க, இன்று இஸ்ரேலை எதிர்க்கிறார். நாளை ஜனாதிபதியானதும் அவர் அதே இஸ்ரேலுடன் தேன்னிலவு கொண்டாடமாட்டா என்று எப்படி நம்புவது? என்று கேள்வி எழுப்பினார் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான். வெள்ளிக்கிழமை மாலை கிண்ணியாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம்களையும் சிறுபான்மை மக்களையும் வஞ்சிக்கும் மோடி ஆட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே அநுரவும் அவரது சகாக்களும் இந்தியா சென்றனர்.

இந்தியாவின் அழைப்பில்தான் அநுர இந்தியாவுக்குச் சென்றார். மோடி அரசின் நிகழ்ச்சி நிரலில்தான் அந்தப் பயணம் அமைந்திருந்தது. அங்கு அவர் யாரையெல்லாம் சந்திக்கவேண்டும் என்று தீர்மானித்தது மோடியின் ஆளும் தரப்புத்தான்.

புல்டோஸரைக் கொண்டு முஸ்லிம்களின் வீட்டை உடைத்து நொறுக்கும் குஜராத் மாநில முதலமைச்சரையும் சந்தித்தார் அநுர. அதானி குழுமத்தை சந்தித்தார். குஜராத் முதலமைச்சருடன் என்ன ஒப்பந்தம் செய்தார், அதானி குழுமத்துடன் என்ன ஒப்பந்தம் செய்தார், மோடி ஆட்சியாளர்களுடன் என்ன ஒப்பந்தம் செய்தார் என்பதை இதுவரைக் காலமும் அவர் வெளிப்படுத்தப்பட வில்லை.

வெளிநாட்டு முதலீடுகளுக்கு எதிராக எப்பொழுதும் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளும் அநுர இந்திய பயணத்தின் பின் இந்தியாவின் முதலீடுகளுக்கு எதிராக இதுவரை எந்த ஆர்ப்பாட்டத்தையும் முன்னெடுக்கவில்லை.

இது தவிர இவர்கள் அடுத்தடுத்து மேற்கு நாடுகளுக்கும் பயணங்களை மேற்கொண்டனர். இவர்களின் கொள்கைகத்தான் என்ன? இன்று இஸ்ரேலை எதிர்க்கும் அநுரவும் சகாக்களும் நாளை இஸ்ரேலுடனும் தேனிலவு கொண்டாடமாட்டார்கள் என எப்படி நம்புவது?

எனவே நாங்கள் அநுர விடயத்தில் மிக அவதானமாக இருக்கவேண்டும். அநுர யார்? அவர்களின் கொள்கை என்ன? எப்படி நடந்து கொள்ளப்போகிறார் என்பதையெல்லாம் அவர்களின் திசைக்காட்டியே எமக்கு காட்டிவிட்டது. அவர்களின் அந்த மோசமான திசை நோக்கி நீங்கள் சென்று நாட்டை படுபாதாளத்திற்கு தள்ளிவிடவேண்டாம்.

எமக்குத் தருவோம் என்று எல்லா சிங்கள வேட்பாளர்களும் குறிப்பிட்டிருப்பவை யாவும் மிக அற்பமானவை. அது ஒருபுறமிருக்க, எமக்குதருவோம் என்று உறுதியளித்த மற்றும் செய்துகொண்ட ஒப்பந்தங்களை எல்லாம் காற்றில் இவர்கள் பறக்கவிட்டதே கடந்த 75 ஆண்டுகால வரலாற்று உண்மை. அதேசமயம், எந்தவிதமான இடைநிறுத்தல்களும் இன்றி எமது வடக்கு மற்றும் கிழக்கு தாயகத்தை பௌத்தமயமாக்கி சிங்களக் குடியேற்றங்களை நிறுவும் கைங்கரியங்களை தொடர்ந்தும் முன்னெடுத்து வந்து தற்போது அவற்றை துரிதப்படுத்தியிருக்கின்றார்கள்.

உதாரணமாக கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்த பின்னர் 2020 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் அவர் பௌத்த பிக்குகளை உள்ளடக்கி ஏற்படுத்திய தொல்லியல் பாரம்பரிய முகாமைத்துவ செயலணி, திருகோணமலையில் குறிப்பாக தமிழ் மக்களின் தாயகமான வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் பல்லாயிரக்கணக்கான நிலங்களை ஆக்கிரமித்தனர். அங்கு 26க்கும் அதிகமான விகாரைகள் அமைக்கப்படுவதற்கு பின்னணியில் நின்று செயற்பட்டுள்ளனர். ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்த பின்னர் இந்த செயலணி இயங்கவில்லை என்றபோதிலும், இந்த விடயத்தில் கோட்டாபயவின் கொள்கைகளை ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆளும் தரப்பு தொடர்ந்து முன்னெடுத்துவருவதாக அண்மையில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டிருக்கின்றது.

2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னர் முல்லைத்தீவில் மட்டும் 67 பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவில் பொதுமக்கள் மற்றும் இராணுவம் இடையிலான விகிதம் 2:1ஆக இன்னமும் இருக்கின்றது. சுமார் 100 க்கும் மேற்பட்ட முகாம்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் அமைக்கப்பட்டுள்ளன. அதேவேளை, திருகோணமலையின் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சில கிராமங்களை சிங்கள மாவட்டங்களுடன் இணைத்து வடக்கையும் கிழக்கையும் துண்டாடும் சில திட்டங்கள் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் தொடக்கம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நான் அறிகின்றேன்.

தமிழ் மக்களின் தாயகப் பிரதேசங்களை ஆக்கிரமித்து முற்றுமுழுதாக இலங்கையை ஒரு பௌத்த சிங்கள நாடாக ஆக்கும் ஸ்ரீ லங்கா அரசின் நிகழ்ச்சித்திட்டம் சுதந்திரம் கிடைத்த நாள் முதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. வரலாற்றை பார்க்கின்றபோது எந்த ஒரு ஜனாதிபதியோ அல்லது கட்சியோ இந்த நிகழ்ச்சிநிரலில் இருந்து பிறழ்ந்து ஒருபோதும் செயற்பட்டதில்லை. கடந்த 7 தசாப்தங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் எமது தமிழ் கட்சிகளும் தமிழ் அரசியல்வாதிகளும் ஆளும் தரப்புடன்

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர்
Kalaikkathir

# நாணய நிதியத்தின் ஒப்பந்தங்களை மீறினால் நாடு ஆபத்தில் சிக்கும்

## ஷெஹான் சேமசிங்க எச்சரிக்கை

எதிர்க்கட்சி வேட்பாளர்கள் கூறுவதைப் போல சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகளை மறுசீரமைத்தால் அத்தருணமே நாடு ஆபத்தில் சிக்க நேரிடும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அத்துடன் வெளிநாட்டு கடன் வழங்குநர்கள் மற்றும் தனியார் பிணைமுறிப் பத்திரதாரர்களுடன் செய்துகொண்ட இணக்கப்பாடுகளை இழந்து நாடு மீண்டும் பொருளாதார ரீதியில்பாரியநெருக்கடிக்குள்செல்லும்அபாயம்உள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள அரசியல் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

உழைக்கும் போது செலுத்தப்படும் வரியை திருத்தியமைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போதுபேச்சுநடத்திவருவதாகவும்அதுதொடர்பான இறுதி இணக்கப்பாடு எட்டப்பதன் பின்னர், 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் வரிகள் குறைக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மேலும் தெரிவித்தவை வருமாறு -

''ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனமான 'ஐந்தாண்டு திட்டம் - இயலும் ஸ்ரீலங்கா' இன்று வெளியிடப்பட்டது. பொருளாதார நெருக்கடியால் அதல பாதாளத்தில் வீழ்ந்திருந்த நாட்டை மீட்டு, மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய நாடாக மாற்றியவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க. வேறு யாரும் சவாலை ஏற்க விரும்பவில்லை. மேலும் அந்த சவாலை ஏற்கும் திறன் அவர்களிடம் இருக்கவும் இல்லை.

நாம் கட்டியெழுப்பிய பொருளாதார ஸ்திரத்தன்மையை முன்னோக்கிக் கொண்டு செல்வதை ஐந்தாண்டுத் திட்டம் - இயலும் ஸ்ரீ லங்கா தேர்தல் விஞ்ஞாபனம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து, கிடைக்கும் பயன்களை அதிகரிக்க வேண்டுமா என்பதை செப்ரெம்பர் 21ஆம் திகதி மக்கள் தீர்மானிப்பர்.

இந்த நேரத்தில், இந்நாட்டின் மிக முக்கியமான விடயம் பொருளாதாரம் ஆகும். பல தரப்பினரும் பொருளாதாரம் தொடர்பான பல்வேறு முன்மொழிவுகளை முன்வைத்தாலும், அந்த முன்மொழிவுகளைநடைமுறைப்படுத்தும்இயலுமை பற்றிய புரிதல் இல்லை என்றே தோன்றுகிறது. நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீண்டும்கட்டியெழுப்பஜனாதிபதிரணில்விக்ரமசிங்க உட்பட நாம் இரண்டு வருடங்களில் கடுமையாக உழைத்தோம்.

நாம் தோல்வியடைவோம் என்று நினைத்து சிரித்தவர்களும், நமது வேலைத்திட்டம் சீர்குலையும் என்றுஎண்ணியவர்களும்இன்றுமக்கள்முன்வந்து வாக்குறுதிகளை அளிப்பது வேடிக்கையாக உள்ளது.

இதுவரை நாம் அடைந்த பொருளாதார ஸ்திரத்தன்மையின்பலன்கள்முறையாகமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. நாடு பொருளாதார ரீதியில் பலமடையும் போது அதன் ஒரு பகுதியை நாட்டின்பொருளாதாரத்தைவலுப்படுத்தபயன்படுத்த வேண்டும். அடுத்த பகுதியை மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் போது எற்பட்ட பாதிப்பைக் குறைக்க மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என ஜனாதிபதி எப்போதும் கூறிவந்தார்.

நாம்எமது வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை மொத்த தேசிய உற்பத்தியில் 5.2 வீதம் ஆக வைத்திருக்க வேண்டும். எதிர்க்கட்சிகள் அளிக்கும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டால், மொத்த தேசிய உற்பத்தியில் வரவு செலவுத்திட்ட பற்றாக் குறை 11.9வீதம் ஆக அதிகரிக்கும்.

மேலும், முதன்மைக் கணக்கின் இருப்பை நேர்மறை 2.3 வீதம் ஆக பேணுவது எமது திட்டத் தின் முக்கிய இலக்காகும். ஆனால் எதிர்க்கட்சிகளின் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டால், முதன்மைக் கணக்கின் இருப்பு நேர்மறை 2.3 வீதத்திலிருந்து எதிர்மறை 4.3 வீதம் ஆகக் குறையும். அதன்பிறகு, சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தை செயற்படுத்த முடியாது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் சுமார் 1000பில்லியன்ரூபாவரிநிலுவையில்உள்ளதாகவும் அவை முறையாக அறவிடப்படுவதில்லை எனவும் சில தரப்பினர் கூறுகின்றனர். ஆனால் 868 பில்லியன் ரூபாவுக்கு வரி மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டளவில் 188 பில்லியன் ரூபா நிலுவைத் தொகையாக இருந்ததுடன், 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 104 பில்லியன் ரூபா அந்த நிலுவைத் தொகையில் இருந்து வசூலிக்கப்பட்டுள்ளது. அதன்படி, எங்களது மறுசீரமைப்புத்திட்டம்வரிசெலுத்துவோருக்குசுதந்திரம் அளித்துள்ளதோடு, வரி முகாமைத்துவத்தையும் திறமையாக மாற்றியுள்ளது.' என்றார்.

வெளிநாட்டலுவல்கள் மற்றும் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அலி சப்ரி -

'ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கொள்கைப் பிரகடனத்திற்கு 'இயலும் ஸ்ரீலங்கா' என்ற பெயரை தெரிவு செய்தமைக்கு விசேட காரணம் ஒன்று உள்ளது. 2022 இல், நம்மால் முடியாது என்று பலர் இந்த நாட்டைப் பொறுப்பேற்க விரும்பவில்லை. ஆனால் இன்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் அவரது குழுவினரும் எவராலும் முடியாது என்று கூறிய அனைத்து விடயங்களையும் செய்து முடித்துள்ளனர்.

அதனால்தான் நமக்கு நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் என்று கூறுகிறோம். மேலும் சவாலான சூழ்நிலைகளில், பயந்து ஓடுவது முக்கியம் அல்ல. அதை எதிர்கொள்வதுதான் முக்கியம். இந்தக் காரணங்களுக்காகவே இந்த ஐந்தாண்டு நடவடிக்கைக்கு 'இயலும் ஸ்ரீலங்கா' என்று பெயரிட்டுள்ளோம்.

இணையத்தளத்தின் ஊடாக இந்த விஞ்ஞாபனத்தை பெற்றுக்கொள்ள முடியும். இந்த அறிக்கை ஒரு கற்பனைக் கதை அல்ல. இதில் உள்ள அனைத்து விடயங்களையும் எவ்வாறு செய்வது என்பது தெளிவாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு முடியாதது எதுவுமில்லை, கடந்த இரண்டு வருடங்களில்நாம்செய்தவற்றின்தொடர்ச்சிதான்இது. நாம் அடைந்த ஸ்திரத்தன்மையை முன்னெடுத்துச் செல்வதுதான் இது.

இதன்படி, மக்களுக்கு சொத்துரிமை வழங்கும் வேலைத்திட்டத்தை முறையாகவும் துரிதப்படுத்தவும் தனி அதிகாரசபை நிறுவப்பட்டு, உறுமய திட்டத்தின் மூலம் இரண்டு மில்லியன் மக்களுக்கு காணி உரிமையும் வழங்கப்படும்.

மேலும், கல்வித் துறையில் சிறப்பு கவனம் செலுத்தி பல்கலைக்கழகங்களை விரிவுபடுத்தவும், பல்கலைக்கழகங்கள் மற்றும் இணைப்புக் கல்லூரிகளை நிறுவவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் பல்கலைக்கழகங்களுக்குள் நுழையும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், அதேபோன்று பல்கலைக்கழக பட்டம் பெறாத முடியாதவர்களுக்கு தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்கான கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்தவும் நாங்கள் பணியாற்றி வருகிறோம்.

மேலும், இந்த விஞ்ஞாபனத்தில் அரச ஊழியர் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், பெண்களை வலுவூட்டும் வகையில், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு 3 மில்லியன் வரை கடன் வழங்கப்படும்.

ஓட்டோ ஓட்டுநர்களுக்கு விசேட கடனைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாட்டை அரச வங்கிகள் ஊடாக முன்வைக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. இது அவர்களுக்கு நியாயமான நலனுக்காக தங்கள் சொத்துக்களைப் பாதுகாக்கும் திறனை அளிக்கிறது. இதற்கிடையில், தனியார் வங்கிகளுடன் இது குறித்து ஆலோசிக்க எதிர்பார்க்கிறோம்.

மேலும், அனைத்து துறைகளிலும் டிஜிற்றல் மயமாக்கலை அறிமுகப்படுத்தி, இளைஞர் சமூகத்தை டிஜிற்றல் மயமாக்கும் நோக்கில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அது தொடர்பான கற்கைகளுக்கான கல்வி உதவித்தொகை மற்றும் குறைந்த வட்டியில் கடன் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பத் தேவையான திட்டங்கள் நடைபெற்று வருகின்றன என்பதையும் கூற வேண்டும். - என்றார்.

மின்சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர-

'கடந்த இரண்டு வருடங்களில் இலங்கையை பொருளாதாரரீதியில்பலப்படுத்தியவேலைத்திட்டத்தின் நீட்சியாகவே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட கொள்கை அறிக்கையை நாம் பார்க்கின்றோம். பொருளாதார நெருக்கடியால் தொழில்துறை சரிந்தது. ரணில் விக்கிரமசிங்கவுடன் ஐந்தாண்டுக் கொள்கைப் பிரகடனத்தில் அந்தத் தொழில்துறையை மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலைக் கல்வி முடித்து வெளியேறும் பிள்ளைகளுக்கு அரச துறை மற்றும் தனியார் துறையை இணைத்து தொழிற் பயிற்சிகளை நடத்தவும் முன்மொழியப்பட்டுள்ளது. அதற்காக ஒரு பிள்ளைக்கு மாதாந்தம் முப்பத்தையாயிரம் ரூபா கொடுப்பனவாக வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. - என்றார்.(05)

## நல்லூரான் தேர்பார்ப்போம் எல்லோரும் வாருங்கள் !



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண். ஆஸ்திரேலியா**

வேதமொடு திருமுறை மேலான வாத்தியங்கள்
காலையிலே ஒலிக்கக் கந்தனுமே புறப்பட்டு
ஆதவனும் அங்கே அழகாக ஒளிகொடுக்க
சோதியெனக் கந்தனுமே தேரேற வந்திடுவான்

முருகா எனும்நாமம் மூவுலகும் கேட்டுவிடும்
அடியார்கள் தமைமறந்து முருகனையே நோக்கிடுவார்
தமிழான முருகனுமே தவழ்ந்துவரும் வெண்ணிலவாய்
அழகாக அசைந்தபடி அடியார்கள் தோழ்வருவான்

வாசுகிப் பாம்பாக தேர்வடமோ நீண்டிருக்கும்
வடம்பிடிக்க அடியார்கள் வாஞ்சையுடன் வந்திடுவார்
வடந்தொட்டால் வழிபிறக்கும் எனவடியார் நம்பிடுவார்
வண்ணமயில் வாகனனின் தேருமே அசைந்துவரும்

ஊரெல்லாம் நல்லூரான் உவந்துவரும் தேர்காண
வெண்மணலில் விதைத்துவிட்ட நன்மணியாய் நிறைந்திருப்பார்
தேர்வடத்தைத் தொட்டுவிட்டால் செய்தவினை அகலுமென
தொட்டுவிட அடியார்கள் கிட்டக்கிட்டச் சென்றிடுவார்

தேரடியில் மலையாக தேங்காய்கள் குவிந்திருக்க
கூடிநிற்கும் அடியார்கள் குறையகற்ற உடைத்திடுவார்
சிதறிவிடும் தேங்காய்போல சிக்கலெலாம் ஆகவென
சிந்தையிலே அடியார்கள் செறிவாக நிறைத்திடுவார்

ஆடம்பரம் இல்லாத ஆலயமாம் நல்லூர்
அமைதியொடு ஆன்மீகம் ஆலயத்தின் சொத்து
வேண்டாத சிக்கல்களை உள்வாங்காக் கோவில்
வேலவனின் அருளொழுகும் நல்லூரின் கோவில்

ஏழை பணக்காரெலாம் இணைந்தங்கே நிற்பார்
எல்லோரும் நல்லூரான் அடியாராய் வருவார்
தேரோடும் வீதியெலாம் திரளாக நிற்பார்
தேரேறி வருமழகன் திருமுகத்தைக் காண

மங்கையர்கள் மடவார்கள் வாலிபர்கள் வயோதிபர்கள்
வண்ண மலராக சின்னவர்கள் நிறைந்திடுவார்
எங்குமே பார்த்தாலும் அடியார்கள் பெருவெள்ளம்
அவ்வெள்ள நடுவினிலே அழகுத்தேர் மெள்ளவரும்

எந்நாட்டில் இருந்தாலும் எல்லோரும் வந்திடுவார்
நல்லூரான் தேர்பார்த்து தொல்லையெலாம் போக்குதற்கு
ஊரிருப்பார் சேர்ந்திடுவார் உமைமைந்தன் தேர்காண
தேரமர்ந்து வேலவனும் யாவையுமே அருளிடுவான்

நல்லூரான் தேர்பார்த்தால் நம்துன்பம் அகன்றுவிடும்
நல்லூரான் வடந்தொட்டால் நன்மைபல பெருகிவிடும்
நல்லூரான் தேர்பார்த்தால் நமையெதுவும் அணுகாது
நல்லூரான் தேர்பார்ப்போம் எல்லோரும் வாருங்கள்

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எது உண்மை?

அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சமஷ்டியை முன்வைத்தால் தேர்தலைப் புறக்கணிக்கும் தமது முடிவை மீள்பரிசீலனை செய்வோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்திருக்கிறது. இதே கருத்தை தமிழ் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோவும் சொல்கிறது. சமஷ்டியை தருவதாக வாக்குறுதி வழங்குபவருக்கே தமது ஆதரவு என்று தமிழ் அரசுக் கட்சி கூ–றுகின்றது.

இந்தக் கட்சிகள் சொல்வது எல்லாம் உண்மைதானா? ஏனெனில் இந்தக் கட்சிகள் சொல்வது எல்லாம் உண்மை என்றால் தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வாக பிராந்திய சுயாட்சியை முன்வைக்கும் அதாவது சமஷ்டியை முன்வைக்கும் மக்கள் போராட்ட முன்னணியைத்தான் இவை ஆதரிக்கவேண்டும்.

புரட்டாதி 21 அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் 38 வேட்பாளர்களில் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வாக முன்னேற்றகரமான முன்மொழிவுகளை முன்வைத்துள்ள ஒரே கட்சியாக மக்கள் போராட்ட முன்னணியும் அதன் வேட்பாளரும்தான் இருக்கிறார்கள். ஆனால் சமஷ்டியை வலியுறுத்தும் எந்தத் தமிழ்க் கட்சியும் அதனைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அந்தத் தரப்பை அணுகி அவர்கள் எதை முன்வைக்கிறார்கள் என்று பேசக்கூட முன்வரவில்லை.

அவர்கள் இந்தத் தேர்தலில் வெல்லப்போவதில்லை என்றாலும் தெற்கில் உள்ள ஒரு முற்போக்குச் சக்தியாகத் தமிழர்களின் அரசியல் கோரிக்கைக்கு ஆதரவான சக்தியாக, நண்பர்களாக அவர்களை அணுகுவதற்கும் குறைந்தபட்சம் அவர்களுக்குத் தார்மீக ஆதரவைத் தெரிவிப்பதற்கும்கூட இந்தக் கட்சிகள் முன்வரவில்லை. அப்படியிருக்கும்போது இவை சமஷ்டியை வலியுறுத்துகின்றோம் என்று கூறுவது வெறும் கூக்குரல்தானே தவிர உண்மை இல்லை.

இவர்களுக்கு வெற்றியளிக்கும் வேட்பாளருக்கு ஆதரவு அளிப்பது அல்லது அவரை எதிர்ப்பது என்கிற இரு தெரிவு அரசியல் மட்டுமே உள்ளது. உண்மையில் சமஷ்டியை வென்றெடுப்பது அவற்றின் நோக்கமல்ல. சமஷ்டியை நோக்கி தெற்கில் இருக்கக்கூடிய சக்திகளைத் திரட்டித் தமது நண்பர்களாகவாவது ஆக்கிக்கொள்ளும் நோக்கம் இல்லை. பேரம் பேசல் மட்டும்தான் இவர்களின் இலக்கு. ஆனால் ஒருவரை ஒருவர் மற்றவர் பேரம் பேசப்பார்க்கிறார், நாங்கள் இனத்துக்காக நிற்கின்றோம் என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள்.

தமிழ் மக்களை வெறும் கிள்ளுக் கீரைகளாகவும் எடுப்பார் சொல் கேட்பாராகவும் நினைத்தாலன்றி இந்தக் கட்சிகளால் இவ்வாறு நடந்துகொள்ள முடியாது. தமது அரசியல் தேவைக்காக ஒரு கோரிக்கையை உயர்த்திப் பிடிப்பதைத் தவிர அதை அடைவதற்கான மார்க்கம் எதுவும் இந்தக் கட்சிகளிடம் இல்லை. அதற்கான வழியை உருவாக்கிக் கொள்ளும் தேடலும் அவற்றிடம் இல்லை. இவர்கள் தொடர்ந்தும் சிங்களக் கட்சிகளுக்கான எதிர்ப்பு அரசியலைச் செய்து தம்மைத் தமிழர்களிடம் தக்க வைக்க முயற்சிக்கிறார்களே தவிர, உண்மையில் தமிழர்களின் உரிமைக்காகப் பாடுபடுகிறார்கள் என்பதை நம்பமுடியவில்லை.

# நம் வாழ்வையே மாற்றப்போகும் காலநிலை மாற்றம்



**வீ. பிரபாகரன்**

புவி வெப்பமயமாதலின் பாதிப்புகளை நாம் ஏற்கெனவே சந்தித்து வருகிறோம். மேற்கு மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் வீசிய தீவிர வெப்ப அலைகள், ஹவாய், சைபீரியா & கனடா நாடுகளில் ஏற்படுத்திய காட்டுத்தீ, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, சீனா, இத்தாலி. ஸ்பெயின், ஸ்லோவேனியா, லிபியா போன்ற நாடுகளை புரட்டிப்போட்ட கடும் வெள்ளம், ஆப்பிரிக்காவை வாட்டி வதைக்கும் வறட்சி, ஆர்டிக் பகுதிகளில் வரலாறு காணாத அளவிற்கு உருகும் பனி, இமயமலை பகுதிகளில் ஏற்பட்ட பனிப்பாறை வெடிப்பு அதைத் இந்திய மாநிலங்களில் ஏற்பட்ட திடீர் வெள்ளம், வெப்ப அலை, ஆகிய நிகழ்வுகள் காலநிலை மாற்ற பாதிப்புகளின் எடுத்துகாட்டாகும். காலநிலை மாற்றம் நம் எதிர்காலத்தின் நிச்சயமற்றத் தன்மையை உருவாக்கிக்கொண்டு இருக்கிறது என்பதற்கு இவையே சான்று.

'உலகில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் நிலவும் காலநிலை அமைவுகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது' என காலநிலை மாற்றத்திற்கான பன்னாட்டுக் குழு (IPCC) கூறுகிறது. மேலும் இந்த அறிக்கை அடுத்த பத்தாண்டுகளில் காலநிலை மாற்றத்தின் பாதிப்புகள் தீவிரமடையும் என எச்சரித்துள்ளது. நாம் காலநிலை நரகத்தை நோக்கிய பாதையில் வேகமாக சென்று கொண்டிருக்கிறோம் என்று ஐக்கிய நாடுகளின் சபையின் தலைவர் அன்டோனியோ குட்டர்ஸ் தெரிவித்துள்ளார்.



காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைக்க 2030க்குள் நாம் எடுக்கும் முன்னெடுப்புகள் மிக முக்கியமானது, இது மனித இனத்தின் இருத்தியலுக்கான பிரச்சனை என பன்னாட்டு அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சூழலில்தான் காலநிலை மாற்றம் என்றால் என்ன? காலநிலை மாற்றத்தின் அடிப்படை அறிவியல் என்ன? காலநிலை மாற்றத்தின் பின்னால் உள்ள அரசியல் என்ன? காலநிலை மாற்றத்தைத் தடுக்க நம் அரசுகள் என்ன செய்கின்றன? செய்ய வேண்டியவை என்ன? என்பது குறித்தெல்லாம் மக்களாகிய நாம் அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியமாக உள்ளது, இதுவே 'காலநிலை மாற்றம் ' அ முதல் ஃ வரை' என்ற தலைப்பில் இத்தொடர் கட்டுரையை எழுதத் தூண்டியது.

இத்தொடர் கட்டுரையின் வாயிலாக காலநிலை மாற்றம் குறித்த அடிப்படை கேள்விகளுக்கும், காலநிலை மாற்றம் குறித்தான வாசகர்களின் சந்தேகங்களுக்கும் பதிலளிக்கப்படும்.

### காலநிலை மாற்றம் என்றால் என்ன ?

நீண்ட கால அளவில் (long term) புவியின் வெப்பநிலையிலும் காலநிலையிலும் ஏற்படும் வழக்கத்திற்கு மாறான குறிப்பிடத்தக்கத் தீவிர மாற்றங்களைக் காலநிலை மாற்றம் என்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் புவியில் நிலவும் சராசரி தட்ப வெப்பநிலையில் ஏற்படும் தொடர் மாற்றங்களாக இவற்றைக் குறிப்பிடலாம். புவி வெப்பமடைவதால் காலநிலை மாற்றம் ஏற்பட்டாலும், காலநிலை மாற்றம் என்பது வெறும் வெப்பநிலை உயர்வோடு நின்றுவிடுவதில்லை, எப்படி சீட்டுகட்டினை ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கி ஒரு சீட்டைச் சரித்தால் அது மொத்த சீட்டுகளையும் தொடர் சங்கிலி விளைவினால் (ம்லிதுஷ்ஜலி சிகூஜ்கூஜ்ளஉமி) சரிக்கின்றதோ அதேபோல காலநிலை மாற்றமானது இங்கிருக்கும் இயற்கை அம்சங்கள் அனைத்தையும் பாதிப்பதாக இருக்கிறது.

உதாரணத்திற்கு, புவி வெப்பமயமாதலால் எங்கோ ஆர்டிக் பகுதியில் பனிக்கட்டி உருகினால் அது இங்கு யாழ்ப்பாணத்தில் கடல் நீர் மட்டத்தினை உயர்த்துகிறது. கடல் நீர் மட்டம் உயர்வதால் கடற்கரைகள் அரிக்கப்படுவதோடு சில கி.மீ. தூரம் வரை கடல் நீர் நிலத்தடி நீரில் கலக்கும் (Sea Water Intrusion) அபாயம் உள்ளது. நீண்ட கடற்கரைகளைக் கொண்ட தமிழர் பகுதிகளில் 1 மீற்றர் கடல் மட்ட உயர்வு ஏற்பட்டால் எவ்வளவு நிலம் நீருக்குள் போகும் என்று யோசித்து பாருங்கள். யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் கடலுக்கு அருகாமையிலேயே ஒரு சில கிலோ மீற்றருக்குள் விளைநிலங்கள் வந்துவிடும், அந்த விளைநிலங்களில் எல்லாம் நிலத்தடி நீர் உப்பானால் என்னவாகும் என்று யோசித்துப் பாருங்கள், உணவு பற்றாக்குறை வந்துவிடாதா ? உணவு பொருட்களில் விலைவாசி ஏறி விடாதா?.

ஆம் எங்கோ ஆர்டிக்கில் உருகும் ஐஸ் நம் தட்டிற்கு வரும் சோற்றை தடுக்கப் போகிறது. எங்கோ அமெரிக்காவின் கடல்களில் கடல் வெப்பநிலையில் ஏற்பட்ட மாற்றமும், காற்றின் சுழற்சியில் ஏற்பட்ட மாற்றமும்தான் 2015 சென்னையில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்திற்குக் காரணம் என்று சொன்னால் உங்களால் நம்ப முடியுமா, ஆம் அதுதான் உண்மை , அதுதான் காலநிலை மாற்றம். வெப்பநிலை உயர்வு, வெப்ப அலைகள், வறட்சி, உணவு பற்றாக்குறை, பனி உருகுதல், கடல் மட்ட உயர்வு, அதிதீவிர புயல்கள், கடும் வெள்ளம்,அதனால் ஏற்படும் நோய் தொற்று, உயிர் இழப்புகள், பொருளாதார இழப்புகள், இயற்கை வளம் குறைதல், அதனால் நாடுகளிடையே நடக்கும் சண்டை என பல்வேறு பிரச்சனைகளை உள்ளடக்கியதுதான் காலநிலை மாற்றம்.

### காலநிலை ஏன் மாறுகிறது?

தற்போது நடந்துவரும் காலநிலை மாற்றத்திற்கு அடிப்படை காரணம் புவி வெப்பமயமாதல். புவி வெப்பமயமாதலுக்கு முக்கிய காரணம் பசுங் குடில் வாயுக்களின் விளைவு (Green House Gas Effect). பசுங் குடில் விளைவு இயல்பாகவே புவியின் மேற்பரப்பில் நிகழக்கூடிய ஒன்றாகும், இயற்கையாக இருக்கக்கூடிய பசுமை இல்ல வாயுக்கள் பூமியைச் சுற்றி ஒரு போர்வை போல் படர்ந்து உள்ளது, இது பூமியில் விழும் சூரிய வெப்பத்தில் குறிப்பிட்ட அளவினை தக்கவைத்துக் கொள்வதின் மூலமாக பூமியை வெப்பமாக வைக்க உதவுகிறது. இந்த இயற்கை பசுங் குடில் வாயுக்கள் மட்டும் இல்லை என்றால் பூமியின் சராசரி வெப்பநிலை -18 டிகிரி ஆக இருந்திருக்கும், பூமியின் பல இடங்களில் உயிரினங்கள் வாழ முடியாத அளவிற்கு குளிர் நிலவி இருக்கும். குளிர் காய்ச்சலின்போது கதகதப்பினைத் தரும் கம்பளிஒ போர்வையைப்போல நமக்கு நன்மை செய்துவந்த பசுங் குடில் வாயுக்களைதான் மனித செயல்பாடுகளின் காரணமாக நமக்கு எதிரியாக மாற்றி இருக்கிறோம். வளிமண்டலத்தில் இயல்பை விட அதிகமாகிய பசுங் குடில் வாயுக்கள் இயல்பைவிட அதிகமான வெப்பத்தை பூமிக்குத் தருகின்றன.

### சரி அது என்ன பசுங் குடில் வாயுக்கள்?

கார்பன் டை ஆக்சைடு (Carbon dioxide)

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# ரணிலுக்கு அல்ல சஜித்துக்கே ஆதரவு

## முன்னாள் எம்.பி. நவவி திட்டவட்டம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கப்போவதாக வெளியான செய்திகளில் எவ்வித உண்மைகளும் இல்லை என்றும் தலைமையின் தீர்மானத்தை பலப்படுத்துவதற்கு சஜித் பிரேமதாஸவையே ஆதரிக்கப்போவதாகவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் புத்தளம் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நவவி தெரிவித்துள்ளார்.

இது பற்றி முன்னாள் எம்.பி. நவவி மேலும் தெரிவிக்கையில் -

எனது கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸிலேயே நான் உள்ளேன். என்னை தேசியப் பட்டியலில் எம்.பியாக்கி, புத்தளம் மாவட்டத்தை கௌரவப்படுத்திய கட்சி இது.

வழங்கிய வாக்குறுதியை காப்பாற்றி, புத்தளம் மாவட்ட மக்களை கௌரவப்படுத்திய எமது கட்சியின் தலைவரான ரிஷாத் பதியுதீன் நேர்மையான அரசியல்வாதி. அவருக்குத் துரோகமிழைப்பது சமூகத்துக்கான சாபக்கேடாகவே அமையும்.

அதிகார ஆசைகளுக்காகக் கட்சி தாவியோர் அரசியலில் நிலைத்ததாக வரலாறே இல்லை. சமூகத்தின் எதிர்காலத்தை தீர்மானிக்கப்போகும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சியின் தலைவர் சரியான தீர்மானத்தையே எடுத்துள்ளார். இத்தீர்மானத்தையே நாம் பலப்படுத்த வேண்டும்.

தேர்தல் காலங்களில் இவ்வாறான வங்குரோத்து வதந்திகள் பரவுவது வழமையே.

இந்த விடயத்தில் ஊடகங்களும் சமூக வலைத்தளங்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். - என்றார்.(05)




# நம் வாழ்வையே மாற்றப்போகும் காலநிலை மாற்றம்

4ம் பக்க தொடர்ச்சி..........

($CO_2$), மீத்தேன் (Methane ($CH_4$), நைட்ரஸ் ஆக்சைடு ஹிஷ்மிஷலிற்வி லிமுஷ்-ள ($N_2O$), ஹைட்ரோ ப்ளூரோ கார்பன்கள் (Hydrofluorocarbons (HFCs), பெர்ப்ளூரோ கார்பன்கள் ( Perfluorocarbons (PFCs), சல்பர் ஹெக்சா ஃப்ளூரைடு (Sulphur hexafluoride ($SF_6$), நைட்ரோஜென் ட்ரை ஃப்ளூரைடு ( Nitrogen trifluoride ($NF_3$) ஆகிய ஏழு பசுங் குடில் வாயுக்கள்தான் புவியின் வெப்பநிலை உயருவதற்கு முக்கியக் காரணமாக உள்ளன. இதில் கார்பன் டை ஆக்சைடு, நைட்ரஸ் ஆக்சைடு, மீத்தேன் போன்ற வாயுக்கள் இயற்கையாகவே புவியின் மேற்பரப்பில் இருந்தாலும் மனித செயல்பாடுகளினால் இந்த வாயுக்களின் அளவு வளிமண்டலத்தில் வெகுவாக உயர்ந்துள்ளது. குறிப்பாக வளிமண்டலத்தில் கார்பன் டை ஆக்சைடின் அளவு 1750களில் இருந்ததைவிட தற்போது 50% அதிகரித்துள்ளது. இது கடந்த 20,000 ஆண்டுகளில் இல்லாத அளவிலான உயர்வாகும். ஹைட்ரோ ப்ளூரோ கார்பன்கள் (Hydrofluorocarbons (HFCs), பெர்ப்ளூரோ கார்பன்கள் ( Perfluorocarbons (PFCs), சல்பர் ஹெக்சா ஃப்ளூரைடு (Sulphur hexafluoride ($SF_6$), நைட்ரோஜென் ட்ரை ஃப்ளூரைடு ( Nitrogen trifluoride ($NF_3$) போன்ற வாயுக்கள் முழுக்க முழுக்க மனிதனால் உருவாக்கப்பட்டு வளிமண்டலத்தில் தேங்கிக் கிடப்பவை. இவை இயற்கையாக இருக்கும் பசுங் குடில் வாயுக்களைவிட பல ஆயிரம் மடங்கு அதிகம் புவியின் வெப்பத்தினை உயர்த்தக் கூடியவை. உதாரணத்திற்க்கு சல்பர் ஹெக்சா ஃப்ளூரைடு ($SF_6$) வாயு கார்பன் டை ஆக்சைடை விட 23,000 மடங்கு அதிகம் புவி வெப்பமயமாக்கும் சக்தி கொண்டது. நைட்ரஸ் ஆக்சைடு ($N_2O$) 273 மடங்கும், மீத்தேன் 30 மடங்கும் ஆற்றல் கொண்டது.

அதேபோல் ஒவ்வொரு வாயுக்களும் வளிமண்டலத்தில் வெவ்வேறு நீடித்து இருக்கும் கால அவகாசத்தையும் (வாழ்நாள்) கொண்டது. உதாரணத்திற்கு மீத்தேன் 12 ஆண்டுகளும், நைட்ரஸ் ஆக்சைடு 109 ஆண்டுகளும், நைட்ரோஜென் ட்ரை ஃப்ளூரைடு 500 ஆண்டுகளும், சல்பர் ஹெக்சா ஃப்ளூரைடு 3200 வருடங்களும் வலிமைனடலத்தில் அப்படியே இருக்கும்.

இந்த பசுங் குடில் வாயுக்களின் பெருக்கத்திற்கு எந்தெந்த மனித நடவடிக்கைகள் காரணம்? காலநிலை மாற்றத்திற்கு மனிதன் மட்டும்தான் காரணமா? என்பன குறித்து அடுத்த தொடரில் பார்ப்போம்.

தொடரும்..........

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City


கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ஓகஸ்ட் மாதத்தின் முதல் 25 நாள்களில் 1 லட்சத்து 40,000 சுற்றுலாவிகள் வருகை



இவ்வருடத்தில் ஓகஸ்ட் மாதத்தின் முதல் 25 நாள்களில் 143,622 சுற்றுலாவிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியா விலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 27,999 ஆகும்.

இந்நிலையில், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 15,918 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 10,068 சுற்றுலாப் பயணிகளும், ஜெர்மனியிலிருந்து 9,162 சுற்றுலாப் பயணிகளும் இலங்கைக்குவருகைதந்துள்ளனர்.

அதன்படி, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 1,341,681 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

(05)

# வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாக கூறி பணத்தை மோசடி செய்தவர் கைது

வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி பணத்தை மோசடி செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவினரால் கடந்த 28ஆம் திகதி ருவன்வெல்ல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர் ருவல்வெல்ல நகரில் சட்ட விரோத வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனமொன்றைநடத்திவந்தநிலையில் இந்த ஆட்கடத்தல், பண மோசடிகளில் மேற்கொண்டுள்ளார்.

அங்கு டுபாய் மாநிலத்தில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி 50 லட்சத்துக்கும் அதிகமான ரூபாவை சந்தேக நபர் மோசடி செய்துள்ளார்.

இவர் இதற்கு முன்னர் மினுவாங்கொடை பிரதேசத்தில் வேலைவாய்ப்பு முகவர் நிலையமொன்றை நடத்திக்கொண்டு பணத்தை மோசடி செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளார் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேலும் கூறுகிறது.

சந்தேகநபரை ருவன்வெல்ல நீதிவான் நீதிமன்றில்ஆஜர்படுத்திய பின்னர், அவரை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)



# யானை கொன்று எரிப்பு: சந்தேகநபர் ஒருவர் கைது

நிக்கவரட்டிய கொடுஅத்தாவல பிரதேசத்தில் காட்டு யானை ஒன்றை கொன்று எரித்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளுக்குக்கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தகாட்டுயானைபலநாள்களுக்கு முன்னர் வனவிலங்குகளை வேட்டையாடுவதற்காக வைக்கப்பட்டிருந்த மின்கம்பிகளில்சிக்கிஉயிரிழந்திருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் உயிரிழந்த காட்டு யானையைஎரித்துஎஞ்சியபாகங்களை கொடுஅத்தாவல பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றில் புதைத்துள்ளார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, சந்தேக நபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் செல்ல முயன்றுள்ள நிலையில் குருணாகல் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

47வயதானமூன்றுபிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபருக்கு எதிராக நிக்கவரட்டிய நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக அதிகாரிகள்மேலும்தெரிவித்துள்ளனர். (05)

# குருணாகலில் லொறி மோதி வயோதிபப் பெண் உயிரிழப்பு

குருணாகல், அலவ்வ - நாரம்மல வீதியில் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

நாரம்மலவிலிருந்து அலவ்வ நோக்கிப் பயணித்த லொறி ஒன்று வீதியில் பயணித்த வயோதிபப் பெண் ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது படுகாயமடைந்த வயோதிபப் பெண் அலவ்வ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குருணாகல், அலவ்வ பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயதுடைய வயோதிபப் பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அலவ்வ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# மதுபான விற்பனைக்கு அனுமதி வழங்கி குடும்ப வன்முறைக்கு வழி சமைக்காதே

## மன்னாரில் போராட்டம்







மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் இரண்டாம் கட்டை பகுதியில் புதிதாக திறக்கப்பட இருக்கும்மதுபானசாலையைதடுத்துநிறுத்தக்கோரி பொதுமக்கள் பதாதைகள் ஏந்தியவாறு கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று (வெள்ளிக்கிழமை) காலை மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இந்த கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தின்போது இவர்கள் தங்கள் கரங்களில் ஏந்தியிருந்த பதாதைகளில் –

'வர்த்தகம் முக்கியத்துவம் கொண்ட மன்னார் தலைமன்னார் சர்வதேச நெடுஞ்சாலையில் மதுக்கடையா?', 'மது விற்பனைக்கு அனுமதி வழங்கி குடும்ப வன்முறைக்கு வழி சமைக்காதே', 'மக்கள் வாழ்விடத்தில் மதுபானசாலையா? ஏழை மக்களின் வாழ்க்கையில் விளையாடாதே', 'பாடசாலை மாணவர்களை போதைக்குள் தள்ளாதே', 'அதிகாரிகளே மதுபானக் கடைக்கு அனுமதி வழங்காதே' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை எந்தியிருந்த நிலையில் போராட்டக்காரர்கள் இந்த கவனவீர்ப்புபோராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தின் கோரிக்கைகள் கொண்ட மகஜர்கள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மன்னார் பிரதேச செயலாளரிடமும் நேரில் சென்று கையளிக்கப்பட்டன.(05)



# சகோதரியின் கணவரைக் கொன்றவருக்கு தூக்குத் தண்டனை விதித்தது நீதிமன்றம்

தனிப்பட்ட தகராறு காரணமாக தனது சகோதரியின் கணவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த சகோதரனுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்துள்ளது.

மரணதண்டனைவிதிக்கப்பட்டவர் வெல்லம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது –

வெல்லம்பிட்டி பிரதேசத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி தனிப்பட்ட தகராறு காரணமாக தனது சகோதரியின் கணவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த சகோதரனுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து, இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் நீண்ட நாள்களாக தொடரப்பட்டிருந்தது.

இந்நிலையில், சந்தேக நபரான சகோதரனுக்கு எதிராக முன் வைக்கப்பட்ட சாட்சிகள் நிரூபிக்கப்பட்டதையடுத்து கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜாவினால் இந்தத் தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

## போராட்டம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்தும்தேர்தல்களின்போதுஅவர்களுக்கு ஆதரவுவழங்கியும்இருக்கின்றார்கள். ஆனால், அவர்களினால் எமது தாயகத்தில் இடம்பெற்ற குடியேற்றங்களையோ அல்லது நில ஆக்கிர மிப்பையோதுளியளவும்நிறுத்தமுடியவில்லை.

உண்மையைச்சொல்லப்போனால், எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி போராடி வடக்கு மற்றும்கிழக்கைகட்டுப்பாட்டுக்குள்வைத்திருந்த 30 வருட காலப்பகுதியினுள் மட்டுமே எமது நிலங்களை எம்மால் பாதுகாக்க முடிந்தது. ஆகவே, போராட்டம் மற்றும் எமது எதிர்ப்பு ஆகியவற்றின் மூலமே நாம் எமது உரிமை களை பாதுகாப்பதற்கும் எமது இருப்பினை தக்கவைத்துக்கொள்வதற்கும் முடியும்.

ஆகவேதான், தமிழ் மக்கள் தமது அபிலாஷ்ஷகள் மற்றும் உரிமைகளை வலியுறுத்தி தமது போராட்டங்களை தீவிரப்படுத்தும் காலம் வந்துவிட்டது. நாம் வாளாதிருந்தால் எமது கண்முன்னேயே எமது தாயகம் பிறர் வசம் கைமாறிவிடும். ஆகவேதான் இந்த சந்தர்ப்பத்தில் இம்முறை ஜனாதிபதி தேர்தலை நாம் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அதற்காக ஆயுதம் ஏந்திப் போராடுமாறு நான் வலியுறுத்தவில்லை. – அது பொருத்தமானதும் அல்ல. நாம்அரசியல்மற்றும்ராஜதந்திரரீதியாக பல்வேறு வடிவங்களில் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். ஏற்கனவே நாமும் எமது வெளிநாட்டு உறவுகளும் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக ஐக்கிய நாடுகள் அறிக்கை இலங்கைக்கு எதிராக வர இருக்கின்றது.

அதனால்தான் நாம் இனிமேலும் உங்களின் போலி வாக்குறுதிகளையும் ஏமாற்றுக்களையும்நம்பப்போவதில்லைஎன்ற செய்தியைநாம்சிங்களஅரசியல்வாதிகளுக்கு எடுத்துக் கூறவேண்டும். அதேவேளை சிங்கள அரசியல்வாதிகள் எந்த ஒரு நியாயமான தீர்வினையும் எமக்கு முன் வைக்கப்போவதில்லை என்பதையும் அவர்களை நம்புவதற்கு நாம் தயாராக இல்லை என்ற செய்தியினையும் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைக்க வேண்டும். இனிமேலும் தாமதம் செய்யாமல் இலங்கை விடயத்தில் நீங்கள் தலையிடவேண்டும் என்று தமிழ் பொதுவேட்பாளர் ஊடாக நாம் ஓங்கி ஒலிக்க இருக்கின்றோம். இது காலம் எமக்கு ஏற்படுத்தியிருக்கின்ற ஒரு சந்தர்ப்பமும் நிர்ப்பந்தமும் ஆகும்.

இது வெறுமனே ஒரு எதிர்ப்பு நடவடிக்கை மட்டும் அல்ல. மாறாக இது ஒரு ராஜதந்திர போராட்டமும்கூட. அத்துடன் இது ஓர் அரசியல் செயற்பாடும் ஆகும். தமிழ் மக்கள் தமது தாயகத்தில் ஒன்றுதிரண்டு சிங்கள அரசுக்கும் சர்வதேசசமூகத்துக்கும்வெளிப்படுத்தும்எமது அபிலாஷைகளுக்கானகுரல், உரிமைகளுக்கான குரல் மற்றும் அடக்கு முறைகளுக்கெதிரான குரல் இதுவாகும். இத்தனை காலமும் சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களுடன் ஒத்துழைத்து அவர்களுக்கு வாக்களித்து ஏமாற்றப்பட்ட நாம் அவர்களின் சூழ்ச்சிகள், ஏமாற்றுக்கள் மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிராக அவர்களுடன் ஒத்துழையாமல்அவர்களுக்குவாக்களிக்காமல் முன்னெடுக்கும் ஒரு ஒத்துழையாமை போராட்டமாகவும் இதனைக் கொள்ளலாம்.

அன்புக்குரியதமிழ்மக்களே!இலங்கையின் எந்த பகுதியில் வாழ்ந்தாலும் , நீங்கள் எமது தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு அவரின் சங்கு சின்னத்துக்கு வாக்களித்து தமிழராக ஒன்றுபட்டு குரல் எழுப்புவதற்கு தயாராகுமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

ஆட்சியாளர்களுக்கும் சிங்கள அரசியல் தலைமைகளுக்கும் அடிவருடிகளாக செயற்படும் எமது சில அரசியல்வாதிகளின் விசமத்தனமான கதைகளை நம்பாதீர்கள்.

இந்த தமிழ் பொதுவேட்பாளர் முன்னெடுப்பை இவர்கள் 'முட்டாள் தனமான செயற்பாடு', 'கேலிக்கூத்து', 'அரசியல் தற்கொலை', 'விசப் பரீட்சை' என்று விமர்சித்து வருகின்றார்கள். இத்தகையவர்கள்யார்என்பது உங்களுக்கு தெரியும். வெல்லமுடியாத ஒரு தமிழ் பொதுவேட்பாளருக்கு வாக்குகளைப் போடக்கூடாது என்றும் ஒரு சிங்கள வேட்பாளருக்கு வாக்குகளை இட்டு பேரம் பேச வேண்டும்என்றும்காரணம்சொல்கின்றார்கள். கடந்த காலத்திலும் இப்படித்தான் சிங்கள அரசியல் தலைவர்களுடன் பேரம்பேசுவதாக கூறி எமது வாக்குகளை அவர்களுக்கு பெற்றுக்கொடுத்து, இன்று தமிழ் மக்களை நடுத்தெருவுக்கு கொண்டுவந்துள்ளார்கள் இவர்கள். இவ்வாறு பேரம் பேசப் போவதாகக் கூறுபவர்கள், முதலில் தம் கடந்த கால பேரப் பேச்சுக்களினால் அவர்கள் எதனைச் சாதித்தார்கள் என்று கூறவேண்டும். வெல்ல முடியாது என்றால் அடக்குமுறையாளருடன் கைகோர்க்கவேண்டும் என்பதா இவர்களின் அரசியல் சித்தாந்தம்? அல்லது தனிப்பட்ட சலுகைகளை அவர்களிடம் இருந்து பெற இவர்கள் துடிக்கின்றார்களா?

இம்முறை தேர்தல் கடந்த எல்லா தேர்தல்களையும் விட முக்கியமானது என்றும் இம்முறை கூடுதலாக பேரம் பேச முடியும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். ஒவ்வொரு தேர்தல்களிலும் 'இம்முறை தேர்தல் முக்கியமானது' என்று கூறித்தான் இவர்கள் தமிழ்மக்களைஏமாற்றிவந்துள்ளார்கள். கடந்த தேர்தல்களில் இவர்கள் என்ன கூறினார்கள் என்பதை வேண்டுமானால் பத்திரிகைகளை எடுத்து படித்துப்பாருங்கள். அடுத்த முறை தேர்தல் வரும்போதும் இதுதான் முக்கியமான தேர்தல் என்று கூறுவார்கள். பேரம் பேசி ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ள 13வது திருத்தச் சட்டத்தின் அமுலாக்கத்தை ஏற்பாடு செய்ய உள்ளார்களா?

தேர்தல் என்ற ஒரு வாய்ப்பை பயன்படுத்தி நாம் எமது அபிலாஷ்ஷகள் மற்றும் உரிமைகளை வலியுறுத்துவதையும் அடக்குமுறைகளை வெளிப்படுத்துவதையும் கேலிக்கூத்து என்றும் முட்டாள்தனமானது என்றும் கூறும் இவர்களை மக்கள் நன்றாக அடையாளம்கண்டுஎதிர்வரும்நாடாளுமன்ற தேர்தலில்அவர்களுக்குபாடம்புகட்டவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். இவர்களால் எமது பாரம்பரிய தமிழ்க்கட்சி இன்று சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது. இவர்களின் நிமித்தமாகவே நான் இலங்கை தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேற வேண்டி வந்தது.

தேசிய மற்றும் சர்வதேச அரசியல் சூழ்நிலைகள் காலத்துக்கு காலம் மாறுபட்டுவரும் வேளையில் நாமும் காலத்துக்கு காலம் எமது அபிலாஸைகள் மற்றும் உரிமைகளை வலியுறுத்தி ஆளும்தரப்புக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தேசமாக ஒன்று திரண்டு செய்திகளை சொல்லித்தான் ஆகவேண்டும். தற்போது அந்த காலம் மீண்டும் எமக்கு வந்திருக்கின்றது. ஆகவே, எனதருமை தமிழ் மக்களே! நீங்கள் இந்த நாட்டின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் தமிழராக திரண்டு தமிழ் பொது வேட்பாளருக்கு அவரின் சங்கு சின்னத்துக்கு புள்ளடியிடவேண்டும்என்றுநான் கோரிக்கை விடுக்கின்றேன்.

அத்துடன், சோரம்போனவர்களினதும் பூச்சாண்டிகாட்டுபவர்களினதும்கதைகளுக்கு எடுபடாமல் தமிழ் தேசிய அரசியலை துணிச்சலாகவும் அறிவுபூர்வமாகவும் அடுத்த கட்டத்துக்கு முன்னெடுத்து செல்வதற்கு தமிழ் மக்களுக்கு நீண்ட காலமாக அரசியல் தலைமை வகித்துவரும் இலங்கை தமிழரசு கட்சி கூட தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்து, தமிழ் மக்களை தேசமாக திரட்டுவதற்கு ஏனைய தமிழ் தேசிய கட்சிகளுடன் ஒன்றுபட்டு செயற்படுவதற்கும் உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் தந்தை செல்வாவின் ஆன்மாவும் தமிழ் தேசிய போராட்டத்தின் வரலாறும் வழிகாட்டும் என்று நான் திடமாக நம்புகின்றேன் – என்றுள்ளார்.

## திருமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடைக்கலநாதன் தெரிவித்தார்.

திருகோணமலையில் உள்ள இலங்கை தமிழ் அரசு கட்சியின் அலுவலகத்தில் நேற்று மாவட்டக் கிளைச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் சிலரைச் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் புரட்சிகரமான முடிவால் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ் தேசிய கூட்டமைப்பு ஊடாக அனைவரும் ஒற்றுமையாகப் பயணிக்கவேண்டும். தமிழர்களின் ஒற்றுமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காட்டியது. இதனால்தான் 22 உறுப்பினர்களை பெற்றிருந்தோம்.

இப்போது சங்கு சின்னம் ஊடாக அனைத்து தமிழ் கட்சிகளுக்கும் மற்றும் சிவில் அமைப்புக்களுக்கும் ஒரே குடையின் கீழ் ஒன்றினைந்து மக்களுக்கு பலமான செய்தியைச்சொல்லவேண்டும். எங்களுக்குள் பிரிவினையற்ற நிலை இல்லாது தமிழ் தேசியத்துக்கு அந்த பலத்தை கொண்டு செல்லவேண்டும். பிரிவினைகள் மக்களுக்கு கோபத்தை ஏற்படுத்தும். இதனால் இருக்கின்ற 10 பிரநிதித்துவம் ஐந்தாக குறையலாம் இந்தக் கூட்டு தேர்தலுக்கான கூட்டாகவன்றி மக்கள் பிரச்சினைகளை வெளிக்கொணரவும் போராட்டங்களை முன்னெடுக்கவும் ஆழமானதாக இருக்கவேண்டும் திருகோணமலை மாவட்ட தமிழ் அரசுக் கட்சியின் முடிவால் கிளிநொச்சி மாவட்ட கட்சி கிளையும் இதே முடிவெடுத்துள்ளது என்றார்

இதன்போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தமிழ் கட்சிகள் சிறு சிறு கட்சிகளாக இருக்காமல் அனைவரும் ஒன்றினைந்து தமிழ் தேசிய கூட்டமைப்பாக பயணித்து இழந்த உரிமைகளை மீளப் பெறுவோம் .1948இல் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது ஆனால் தமிழ்மக்களுக்குகிடைக்கவில்லை – என்றார்.

## விக்கிரமசிங்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கதோல்வியடைந்தால்முழுநாடும் தோல்வியடையும். மீண்டும் வரிசை யுகம் உருவாகும் – என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார்.

மலையக மக்கள் உட்பட ஒட்டு மொத்த நாட்டு மக்களும், நாட்டின் நலன்கருதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெற வைக்கவேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து அன்று கொட்டகலை பகுதியில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டதத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைய, நாடாளுமன்ற உறுப்பினர்எம்.ராமேஸ்வரனின்தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் கொட்டகலை பிரதேச சபையின் முன்னளா தவிசாளர் ராஜமணி பிரசாத், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தலைவர் அனுஷா சிவராஜா உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்துக் கொண்டனர்.

ராமேஸ்வரன்கூட்டத்தில்தெரிவித்ததாவது:

எமது மக்களின் அமோக ஆதரவுடன் நானும், எமது பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமானும் நாடாளுமன்றத்துக்கு தெரிவானோம். அவ்வாறு தெரிவானதன் மூலம் நெருக்கடியான காலகட்டத்தில்கூட எமது மக்களுக்கு சேவையாற்ற முடிந்தது.

எமது பொதுச்செயலாளர் அமைச்சரான பின்னர் குறுகிய காலப்பகுதிக்குள் மலையகத்துக்கும், முழு நாட்டுக்கும் பல சேவைகளை செய்யக்கூடியதாக இருந்தது. கொட்டகலை உட்பட பல பகுதிகளில் வீதிகள் புனரமைக்கப்பட்டன. உட்கட்டமைப்புவசதிகள் மேம்படுத்தப்பட்டன. கடந்தகாலங்களில் முழுமைப்படுத்தப்படாதிருந்தவீட்டுத்திட்டங்கள் முழுமைப்படுத்தப்பட்டுன. புதிய வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பமாகின.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவான பிறகு வரிசை யுகத்துக்கு முடிவுகட்டினார். பொருளாதாரத்தை மேம்படுத்த திட்டங்களை வகுத்தார். இன்று ரூபாவின் பெறுமதி வலுவடைந்துவருகின்றது. பொருட்களின் விலைகளும் குறைந்துள்ளன. சுற்றுலாப்பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது.எமது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வும் வழங்கப்பட்டுள்ளது .

எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்நாட்டை ஆள வேண்டியது கட்டாய தேவையாகும். இன்னும் ஐந்தாண்டுகளுக்கு அவரின் தலைமைத்துவம் இருந்தால் இந்நாடு நிச்சயம் முன்னேறும். சிலவேளை ரணில் விக்கிரமசிங்க தோற்றால் அது தனிமனிதனுக்குரிய தோல்வி அல்ல, நாட்டின் தோல்வியாகும். அதுமட்டுமல்ல மீண்டும் வரிசை யுகம் உருவாகும்.

இது தேர்தல் காலம் என்பதால் சில ஜனாதிபதி வேட்பாளர்கள் அதை வழங்குவேன், இதை வழங்குவேன் என உறுதிமொழி வழங்கலாம். ஆனால் எதுவும் நடக்கப்போவதில்லை . நடைமுறைக்கு சாத்தியமான உறுதிமொழிகளை ஜனாதிபதி வழங்கியுள்ளார். எனவே, அவர் எமது மக்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவார் என்றார்.

## நல்லூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நாளினை பாடசாலைகளுக்கும் இந்து அரச ஊழியர்களுக்கும் விடுமுறையாக வழங்கவேண்டும் என சர்வதேச இந்து மத பீடத்தின் சார்பில் அவர் கோரிக்கையாக முன்வைத்திருந்தார்.

இது தொடர்பாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சனுடன் தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்டு வினவிய போது, விடுமுறை தேவையான பாடசாலைகள்கோரிக்கையைமுன்வைத்தால் விடுமுறை வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார் என பாபு சர்மா தெரிவித்தார். கோரிக்கை விடுக்கும் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படுவது வழக்கமான நடவடிக்கைதான் என்றும் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

## ஜனநாயகத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பு வழங்கப்பட்ட கோத்தாபய ராஜபக்ஸவின் போக்குகள் மக்களுக்கு திருப்தி கொடுக்கவில்லை.

இதனால் மக்களின் எதிர்ப்பலையால் முழுமையான பதவி மூன்றாண்டுகளுக்கு முன்பாகவே அவர் ஆட்சியில் இருந்து அகல நேர்ந்தது. இந்நிலையில்எமதுநாட்டின்அரசியல் அமைப்பின்படிமக்களின்வாக்குகளால்அன்றி மக்களால்பாராளுமன்றத்துக்குஅனுப்பப்பட்ட பிரதிநிதிகளால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

இவர் பதவியேற்றபோது மிக பாரதூரமான பொருளாதார நெருக்கடி நாட்டில் புரையோடி காணப்பட்டது. நாட்டை பழையநிலைக்குமீட்டு எடுக்க கடந்த இரு வருடங்களையும் அவர் கச்சிதமாக பயன்படுத்தினார். இப்போது மக்கள் நிம்மதி பெருமூச்சு விட்டு கொண்டிருக்கின்ற தருணத்தில்தான் தேர்தல் வந்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களில் அவரால் ஏற்படுத்தி தரப்பட்ட முன்னேற்றங்களை மக்களாகியநாம்ஏற்றுகொண்டிருக்கின்றோம். எனவே நாம் ஜனநாயக விழுமியங்களை மதிப்பவர்களாக நடந்து அடுத்த ஐந்து வருடங்களுக்கு ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக ஏற்று கொள்ள வேண்டும். நாட்டை அடுத்த கட்ட அபிவிருத்தி கொண்டுசெல்ல அவருக்கு கட்சி அரசியலுக்கு அப்பால் வாய்ப்பு வழங்க வேண்டும்.

இவர்தூரநோக்குடையசெயல்திட்டங்களை வைத்திருக்கின்றார். இளையோர்களுக்கான தொழில் வாய்ப்பு, குடும்பங்களுக்கான வாழ்வாதாரம், வீட்டு திட்டம், பிராந்தியத்தின் சிறந்த தகவல் தொழினுட்பம் , சகல இனங்களுக்கும் சமவுரிமை போன்ற தூர நோக்கு திட்டங்களூடாக இலங்கையர்களாக நம் எல்லோரையும் பெருமை அடைய செய்ய வல்லவராக விளங்குகின்றார்.

நாட்டின் 70 சதவீதமான வாக்காளர்கள் இவர்சொல்வதையேசெய்பவர், செய்வதையே சொல்பவர் என்று விசுவாசிக்கின்றனர். ஆனால் இதை மாற்ற குறுகிய சுய இலாப ஈட்டங்களுக்காகபலவேட்பாளர்களும்களத்தில் குதித்துள்ளார்கள். நமதுநாட்டின்பெருமையை நிலை பெற செய்ய வேண்டும் என்றால் நாம் உண்மையாகவே ஜனநாயகத்தை மதிப்பவர்கள் என்றால் அடுத்த ஐந்து வருடங்களை நாம் ரணிலுக்கே கொடுத்து பார்க்க வேண்டும்.

## யாழ். வந்தார் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரகாஷ், நாடாளுமன்ற உறுப்பினர்களான எரான் விக்கிரமரத்ன, அர்ச்சுன ரணதுங்க, கட்சியின் தொகுதிகளின் அமைப்பாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கூட்டம் பி.ப 3.30 மணியளவில் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. மக்களும் குறித்த நேரத்திற்கு வருகை தந்திருந்தனர். பேருந்து மூலமும் மக்கள் குறித்தஇடத்திற்குஅழைத்துவரப்பட்டிருந்தனர். இருப்பினும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித், குறித்த கூட்டத்திற்கு சுமார் இரண்டரை மணி நேரம் தாமதமாகவே வந்தார். பின்னரே கூட்டத்திற்கு வருகை தந்திருந்தார். இதனால் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த வெதும்பிப் போயிருந்தனர். சிலர் கூட்டத்தில் கலந்துகொள்ளாது திரும்பிச் சென்றனர்.

முன்னதாக நேற்றுக்காலை யாழ்ப்பணம் வந்து சேர்ந்த சஜித் நல்லூர் ஆலயத்திற்குச் வேட்டியுடன் சென்று தரிசனம் செய்தார். அர்ச்சனையும்செய்துகொண்டார். ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றிபெறவேண்டிப் பிரார்த்தித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளுக்காகவும், ஆட்சிக்குவந்ததன் பிற்பாடு தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு வேண்டியுமாக யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையையும் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார்.

யாழ். நாகதீப ரஜ மகா விகாரைக்கும் சென்று செய்து மத வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசி பெற்றுக் கொண்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

## ஜனாதிபதியாக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூடு பிடித்துள்ளது. 39 வேட்பாளர்கள் களமிறங்கி இருக்கின்றார்கள். இதில் வெல்லும் வேட்பாளராக சஜித் பிரேமதாசவே இருக்கின்றார்.இன்றுநாடுமுழுவதும்சஜித்தின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக மக்கள் ஒன்று சேர்ந்துள்ளதைப் பார்க்கின்றோம்.

இன்று முதல் கட்டமாக சம்மாந்துறை பிரதேசசெயலகத்திற்குஉட்பட்டவளத்தாப்பிட்டி, புதிய வளத்தாப்பிட்டி, இஸ்மாயில் புரம், உள்ளிட்ட கிராமங்களில் சஜித் ஆதரவு துண்டறிக்கைகளை விநியோகித்து எமது பரப்புரையைத் தீவிரப்படுத்தியுள்ளோம்.

வீடு வீடாகச் சென்று வழங்குகின்றோம். வீதிகளில் பயணம் செய்பவர்களுக்கும் ஆலய நிர்வாகத்தினருக்கும் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் துண்டறிக்கையை விநியோகித்துள்ளோம். சிங்கள, தமிழ், முஸ்லீம்மக்கள்அனைவரும்இணைந்துசஜித் பிரேமதாசவினைஆதரிக்கவேண்டும். இன்று நாடளாவிய ரீதியாக நாம் பலப்பரீட்சையில் இறங்கி இருக்கின்றோம். செப்டம்பர் 22 ஜனாதிபதியாக சஜித் பிரேமதாச வருவதை எவராலும் தடுக்க முடியாது. காரணம் இறைவனால் செய்ப்பட்ட நியதியாக அது மாறி விட்டது -என்றார்.

## சர்வதேச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி கிளை காரியாலயத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் 20 நாட்களே இருக்கின்ற இந்த நேரத்தில் யாருக்கு வாக்களிப்பது என்கின்ற தீர்மானத்தை மக்கள் எடுக்கப் போகின்ற இந்த நேரத்திலே ஒரு மும்முனைப் போட்டி இருப்பதாக மக்கள் பேசிக் கொள்கிறார்கள். ரணில் விக்கிரமசிங்க அவர்களை பொறுத்தவரை இந்த நாட்டை மீட்டு விட்டேன். போலின் யுகத்தை நிறுத்திவிட்டேன். பொருட் தட்டுப்பாடுகள் இல்லை. என்கின்ற கானல் நீர் கதைகளை பேசுவதன் மூலம் தானே நிகரில்லா தலைவன் எனும் மாயையை காட்ட முனைகின்றார்

பொருளாதார நெருக்கடியைச் சீர் செய்வதற்காக சர்வதேச நாணய நிதியத்திடமும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமும் பங்களாதேஸ், இந்தியா போன்ற நாடுகளிடமும் அதிக பணத்தை கடனாக பெற்று கடன் சுமையை மேலும் அதிகரித்திருக்கின்றார். கடன் மேல் கடன் படுகின்றபோது அதனை மீளச் செலுத்த முடியாத ஓர் இக்கட்டான நிலை ஏற்படுவதோடு எமக்குச் சொந்தமான அரச நிறுவனங்களை, காணிகளை வெளிநாடுகளுக்கு வழங்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகிறது. இவ்வாறே இலங்கை பெட்ரோலியம், டெலிகொம் போன்ற நிறுவனங்கள் வெளிநாடுகளுக்கு அடாத்தாக வழங்கப்பட்டு கொண்டிருக்கின்றன.

இது உண்மையான மாற்றமோ அபிவிருத்தியோ அல்ல. இந்த நாட்டை ஊழல் மோசடிகளால் நாசம் செய்த கொள்ளையர்களையும் இனவாதிகளையும் பாதுகாக்கின்ற ஒரு கூடாரமாகவே ரணிலின் தலைமை காணப்படுகின்றது. பெரும் பெரும் ஊழல் மோசடிகளால் கொள்ளையடிக்கப்பட்ட மோசடி செய்யப்பட்ட உடைமைகளும் சொத்துகளும் பணங்களும் மீள நாட்டின் தேசிய வருமானத்தில் இணைக்கப்படுகின்ற போதுதான் உண்மையான அபிவிருத்தியை காண முடியும். இதற்கு ரணில் என்கின்ற தலைமை எந்த வகையிலும் நடவடிக்கை எடுக்கப் போவதில்லை.

அனுரகுமார திசாநாயக்க என்பவர் நன்றாக பேசக் கூடியவர். பேச்சால் மக்களை கவரக்கூடியவர். எதிர்க்கட்சியிலே இருந்து கொண்டு வெறும் வாய் பேச்சினால் மட்டும் இளைஞர்களையும் நாட்டு மக்களையும் கவர்ந்து கொண்டிருக்கின்றார். அவரால் இதுவரை ஆக்கபூர்வமான எந்த ஒரு வேலை திட்டமும் நாட்டிற்கோ மக்களுக்கோ செய்யப்படவில்லை. தேசிய மக்கள் சக்திக்கு தேர்தல் செலவுகளுக்காக வெளிநாட்டு நிதி அனுசரனைகள் கிடைக்கின்றன. பரப்புரைக்கு அதிக பணத்தை செலவு செய்கின்றார்கள். கூடுதலானவிளம்பரங்களைச்செய்கின்றார்கள்.

கடந்த கால அனுபவங்களை ஒப்பிடுகின்றபோது அவர்களுக்குச் சனம் திரண்டாலும் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவராக இருந்து ஜனாதிபதி வேட்பாளராகபோட்டியிடுகின்றசஜித்பிரேமதாச, பாடசாலைகளுக்கு பஸ்களையும் ஸ்மார்ட் வகுப்பறைகளையும், வைத்தியசாலைகளுக்கு வைத்திய உபகரணங்களையும் பல்வேறு இன்னோரென்ன வேலை திட்டங்களையும் ஆக்கபூர்வமாகச் செய்து வந்திருக்கின்றார். எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தை நிர்வகிப்பதற்குச் சிறந்த நிபுணத்துவம் கொண்டபுத்திஜீவிகள் குழு காணப்படுகின்றது.

ஆட்சியாளர்களால்கொள்ளையடிக்கப்பட்ட அரச சொத்துக்களை சட்ட நடவடிக்கையின் மூலம் மீட்டெடுப்பேன் எனும் அறைகூவலை சஜித் பிரேமதாச முன்மொழிகின்றார். எனவே வாக்களிக்கின்ற போது இந்த நாட்டை மீட்டெடுத்து உற்பத்தியை அதிகரித்து வளமான அபிவிருத்தியையும் நாட்டையும் உண்டாக்குவதற்குசஜித்பிரேமதாசஅவர்களை வெற்றி பெறச் செய்து ஜனாதிபதியாக நிலை நிறுத்த வேண்டும் என மக்களை கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்வருகின்ற 5, 6 திகதிகளில் நடைபெற இருக்கின்ற தபால் மூல வாக்களிப்பின்போது அரச ஊழியர்களும் அதிகாரிகளும் ஒரு இன, மத, குல பேதங்களுக்கப்பால் சிறந்த தலைவனாக மிளிருகின்ற சஜித் பிரேமதாச அவர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என கன்னியமாக கேட்டுக் கொள்கின்றேன் -என்றார்.

## ரிஷாத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில்ஆதரவுவழங்குவதாகஅறிவித்துள்ள நிலையில் அவர் ரணில் பக்கம் சாய்கிறாரா என்கிற அரசியல் சர்ச்சை நேற்று வெடித்துக் கிளம்பியது.

வவுனியா, வைரவபுளியங்குளத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பரப்புரைக்கூட்டம்நடக்க இருக்கும்நிலையில், அதற்கான மேடை அமைப்பு வேலைகள் நடந்துவருகின்றன. நாடாளுமன்றஉறுப்பினர் ரிஷாட் பதியுதீன் நேற்று நேரில் சென்று அந்தப் பணிகளைப் பார்வையிட்டார். இதை அடுத்தே அவர் யார் பக்கம் நிற்கிறார் என்கிற சர்ச்சை வெடித்தது.

வவுனியாவிற்கு இன்று வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வைரவபுளியங்குளம், யங்ஸ்ரார் மைதானத்தில் நடைபெறும் தேர்தல் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்கின்றார்.

அதற்கான மேடை ஏற்பாடுகள் துரிதமாக இடம்பெற்றுவருகின்றன. இந்நிலையில்குறித்த ஏற்பாடுகள் இடம்பெறும் இடத்திற்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் அவற்றை பார்வையிட்டிருந்ததுடன், அங்கு பணிகளுக்குப் பொறுப்பாக நின்ற சிலருடன் அதுபற்றிக் கலந்துரையாடியும் இருந்தார். (100)




காலைக்கதிர் Kalaikkathir



# பதில்களை அறிவதற்கான உரிமை பாதிக்கப்பட்ட தரப்பினருக்குண்டு

## அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் வலியுறுத்து

இலங்கையில்வலிந்துகாணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்ட தரப்பினர் அவர்களுக்குரிய பதில்களை அறிந்துகொள்வதற்கும், பொறுப்புக்கூறலைப் பெறுவதற்குமான உரித்தைக் கொண்டிருக்கிறார்கள் என இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

வருடாந்தம் ஒகஸ்ட் 30 ஆம் திகதி வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், அதனை முன்னிட்டு தனது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளப்பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங், தாம் வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் உண்மையையும் நீதியையும் கோரும் சமூகங்களுடன் உடன்நிற்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

அதுமாத்திரமன்றி தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அறியாமல் இருப்பதன் சுமை மிக அழுத்தமானது எனக் கவலை வெளியிட்டிருக்கும் அவர், இலங்கையில் பாதிக்கப்பட்ட தரப்பினர் அவர்களுக்குரிய பதில்களை அறிந்துகொள்வதற்கும், பொறுப்புக்கூறலைப் பெறுவதற்குமான உரித்தைக் கொண்டிருக்கிறார்கள் எனக் குறிப்பிட்டிருக்கிறார். (05)

# வவுனியா – மன்னார் வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் இறப்பு: ஒருவர் காயம்





வவுனியா - மன்னார் வீதியில் இடம்பெற்றவிபத்தில்இளைஞர்ஒருவர் மரணமடைந்துள்ளதுடன், ஒருவர் படுகாயமடைந்துவவுனியாவைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

வவுனியா - மன்னார் வீதியில், பூவரசன்குளம், குருக்கள்புதுக்குளம் பகுதியில் வெள்ளிக்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றிருந்தது.

மன்னாரிலிருந்து வவுனியா நோக்கி வந்த கூலர் ரக வாகனமும், வவுனியாவிலிருந்து மன்னார் நோக்கி சென்ற மோட்டர் சைக்கிளும் பூவரசன்குளம், குருக்கள் புதுக்குளம் பகுதியில் பயணித்த போது நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் மோட்டர் சைக்கிளில் பயணித்த இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளதுடன், மற்றொரு இளைஞர் படுகாயடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பரமனாத் சிவாகரன் (வயது 30) என்ற இளைஞரே மரணமடைந்தவராவார். செல்லத்துரைகிருஸ்ணபாலமன் (வயது 37) என்ற இளைஞரே காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவ் விபத்து தொடர்பாக பூவரசன்குளம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்னர்.(05)

# மாணவர்கள் ஆர்ப்பாட்டம் கிண்ணியாவில் சம்பவம்



கிண்ணியா வலய கல்வி அலுவலகத்துக்குட்பட்ட கிண்ணியா வேப்பந்தவனை சாகிரா வித்யாலயத்தில் ஆசிரியர் ஒருவரை தாக்கியதாக கூறி மாணவர்களால் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவம் நேற்று காலை 8.30 மணி அளவில் இடம்பெற்றது. இதனால் மாணவர்கள்கலவரம்அடைந்துஆசிரியரை தாக்கிய வரை கண்டிக்க வேண்டும் என கூறியே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வகுப்பறைக்குள்நுழைந்துஆசிரியரை தாக்கியுள்ளமை.மாணவனின்உறவினரின் கண்டிக்கத்தக்க செயல். கிண்ணியா வலய பாடசாலை ஒன்றில் மாணவனை கண்டித்ததற்காக மாணவரின் உறவினர் உரிய ஆசிரியருக்கு பதிலாக வேறு ஓர் ஆசிரியரை பாடசாலைக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தியுள்ளார். இதன் காரணமாக வகுப்பறை மாணவர்கள் அச்சமடைந்து வகுப்பறையை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

இந்த விடயத்தை கண்டித்து மாணவர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

இவ் விடயம் தொடர்பாக உரிய நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாடசாலை சமூகமும் பெற்றார்களும் எதிர்பார்க்கிறார்கள்.

இந்த விடயத்தை அறிந்த வலயக் கல்வி பணிப்பாளர் சம்பவ இடத்துக்கு விஜயம் செய்து இரு சாராரையும் சமாதானப்படுத்தியதைஅடுத்துமாணவர்கள் மீண்டும் பாடசாலைக்கும் சென்றார்கள்.

பின்னர் வழமை போல் கல்வி நடவடிக்கைகள் இடம்பெற்றன.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# குழந்தை கடத்தலில் ஈபிடிபியின் ஈடுபாடு வெளியாகியது: காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க செயலர் குற்றச்சாட்டு

காணாமல் ஆக்கப்பட்ட பல குழந்தைகளின் தலைவிதியை நாம் ஆழ்ந்த கவலையுடனும் வருத்தத்துடனும் சிந்திக்கிறோம். போரில் பலியானவர்கள் என்பதற்குப் பதிலாக, அவர்கள் மனித கடத்தலுக்கு பலியாகியிருக்கிறார்கள் என்று சான்றுகள் தெரிவிக்கின்றன. அமெரிக்கத் தூதுவர் ராபர்ட் ஓ.பிளேக்கின் இரகசியத் தகவல்கள், குழந்தை கடத்தல் நடவடிக்கைகளில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈபிடிபி) போன்ற துணை இராணுவக் குழுக்களின் ஈடுபாட்டை வெளிப்படுத்துவதாக தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் தெரிவித்தார்.

சர்வதேசகாணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேசதினத்தில், வன்னியில் இருந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளின் தாய்மார்களாகிய நாங்கள், உண்மை மற்றும் நீதிக்கான 2,750 ஆவது நாளாக இடைவிடாத முயற்சியில் ஒன்றுபட்டு நிற்கிறோம்.

எமது பயணம் காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளை கண்டறிவது மட்டுமல்லாது தமிழினத்தை எதிர்கால இனப்படுகொலைச் செயல்களில் இருந்து பாதுகாப்பதும், தமிழர் இறையாண்மைக்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வதேச ஆதரவைப் பெறுவதும் ஆகும்.

30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இது இனப் போருக்கு முன்னும், பின்னும், பின்னரும் நமது இனத்தை பாதித்த வேதனையான உண்மையாகும்.

நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக, இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தமிழ் இளைஞர்களுக்கு எதிரான ஆயுதமாகப் பிரயோகித்து, எமது இனத்திற்கு அச்சத்தையும் துயரத்தையும் ஏற்படுத்துகிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் நீண்டகால இருப்பு அச்சத்தின் சூழலை நிலைநிறுத்தியுள்ளது. இது தமிழ் மக்களை திட்டமிட்ட இலக்கு வைக்கும் ஒடுக்குமுறைக் கருவியாகும்.

காணாமல் ஆக்கப்பட்ட பல குழந்தைகளின் தலைவிதியை நாம் ஆழ்ந்த கவலையுடனும் வருத்தத்துடனும் ஒப்புக்கொள்கிறோம். போரில் பலியானவர்கள் என்பதற்குப் பதிலாக, அவர்கள் மனித கடத்தலுக்கு பலியாகியிருக்கிறார்கள் என்று சான்றுகள் தெரிவிக்கின்றன. அமெரிக்கத் தூதுவர்ராபர்ட்ஓ. பிளேக்கின் இரகசியத்தகவல்கள், குழந்தை கடத்தல் நடவடிக்கைகளில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி போன்ற துணை இராணுவக் குழுக்களின் ஈடுபாட்டை வெளிப்படுத்துகிறது. இந்த குழந்தைகள் இலங்கை இராணுவப் படைகள் மற்றும் ஊழல் அதிகாரிகளின் உடந்தையுடன் அடிமைத்தனம், கட்டாய உழைப்பு மற்றும் விபச்சாரத்திற்கு விற்கப்பட்டனர் எனக் கூறப்படுகிறது.

இந்தக் குற்றங்களின் தீவிரத்தன்மையைக் கருத்தில் கொண்டு, முறைப்பாடுகளை வழங்குவதைத் தாண்டி உறுதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்சில் மற்றும் பிற சர்வதேச அமைப்புகளை நாங்கள் அவசரமாக அழைக்கிறோம். வெறும் ஆவணப் பதிவுக்கான காலம் வெகு காலமாகிவிட்டது. இந்த கொடூரமான குற்றங்களை விசாரித்து, குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கும், காணாமல் ஆக்கப்பட்ட எங்களின் குழந்தைகளை கண்டறிவதற்குமான தீர்க்கமான நடவடிக்கைக்கான நேரம் இது.

தமிழ் மக்கள் அனுபவித்து வரும் துன்பங்களுக்கு முடிவுகட்டவும், காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளை அவர்களது குடும்பங்களுடன் மீண்டும் இணைக்கவும், இலங்கை அரசின் அட்டூழியங்களுக்கு பொறுப்பேற்கவும் விரைவான மற்றும் உறுதியான நடவடிக்கைகளை நாங்கள் கோருகிறோம். - என்றார்.(05 - 100)

# போதைப்பொருள் தடுப்புக்கான ஒருநாள் மாணவர் பயிற்சி நெறி

(தில்சாத் பர்வீஸ்)

மாணவர்களுக்கான தலைமைத்துவ மற்றும் போதைப்பொருள் தடுப்புக்கான ஒருநாள் பயிற்சி நெறி வியாழக்கிழமை மல்வத்தை விபுலானந்த மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

ஒலுவில் அல்ஹம்றா மகாவித்தியாலய மாணவர்கள் 35 பேர் இப்பயிற்சி நெறியில் கலந்துகொண்டு சான்றிதழ்களையும் பெற்றனர்.

பொலிஸ் கெடட் பிரிவின் பணிப்பாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான சிந்தக குணரத்னவின் தலைமையில் மற்றும் நேரடி மேற்பார்வையில், பயிற்சி மற்றும் உயர் பயிற்சி சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சஜீவ மெதவத்தவின் வழிகாட்டலில் மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி மற்றும் போதைப்பொருள் தடுப்புக்கான ஒருநாள் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

இதில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண கலந்து கொண்டு மாணவர்களுக்க தலைமைத்துவம் சம்பந்தமான பெறுமதியான விடயங்களை முன்வைத்தார்.

இந்தப் பயிற்சி நெறி பொலிஸ் கெடட் பிரிவின் கட்டளைத் தளபதியின் மேற்பார்வையின் கீழ் பொலிஸ் கெடட் தலைமையகம் மற்றும் பொரலந்த பொலிஸ் கெடட் பயிற்சி நிலையத்தின் பொலிஸ் கெடட் ஆலோசகர்களால் நடத்தப்பட்டது.

இப்பயிற்சி நெறிக்கு செல்வதற்கு நெறிப் படுத்தலை மேற்கொண்ட இணைப்பாடவிதானத்திற்கு பொறுப்பான பிரதி அதிபர் ஜே.வஹாப்தீன், அனுமதி ஒத்துழைப்பை வழங்கிய கல்லூரியின் முதல்வர் அஷ்ஷெய்க் யு.கே.அப்துர் ரஹீம் (நழீமி) அவர்களுக்கும் பாடசாலையின் கெடட் பிரிவுக்கு பொறுப்பான ஆசிரியர் லெப்டினன் ஏ.எம்.எம்.கியாஸ் மற்றும் பாடசாலையின் பிரதி, உதவி அதிபர்களுக்கும் மற்றும் பயிற்சிகளை வழங்கும் சுதர்சன் பி.சி. அவர்களுக்கும் பாடசாலையின் கெடட் குழுவின் சி.கியூ சறாபத் இஸ்னி ஆகியோர் கலந்து கொண்டனர்.(05)

# சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளை புனரமைப்புக் கூட்டம்



(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை புளக் ஜே கிழக்கு 2 கிராம சேவகர் பிரிவுக்கான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளை புனரமைப்புக் கூட்டம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம்.மன்சூர் தலைமையில் சம்மாந்துறையில் நடைபெற்றது.




இந்நிகழ்வில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, உச்சபீட உறுப்பினரும், அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளருமான ஏ.சீ. சமால்டீன், உச்சபீட உறுப்பினரும் முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் சட்டத்தரணி எம்.எம்.சௌபீர், உச்ச பீட உறுப்பினரும் முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் அஸீஸ், முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர்களான ஏ.எச்.எம். புஹாத், எஸ். நழீம், சம்மாந்து இளைஞர் அமைப்பாளர் அர்சாத் இஸ்மாயில் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

(05)



# தரம் ஐந்து புலமைப்பரிசில் மாணவர்களுக்கு முன்னோடி வினாத்தாள்கள் வழங்கி வைப்பு







தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும் நோக்கில் பொக்கிசம் அமையத்தின் இலவச கல்வித் திட்டத்தின் கீழ் தரம் ஐந்து புலமைப்பரிசில் (இவ்வாண்டு 2024) எழுதும் மாணவர்களுக்கான இலவச மாதிரி முன்னோடி வினாத்தாள்கள் கல்முனை கல்வி வலய காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை கல்வி கோட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

கல்முனை கல்வி வலயத்தில் உள்ள கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, மாளிகைக்காடு, பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு புலமைப்பரிசில் இலவச மாதிரி முன்னோடி வினாத்தாள்கள் அடங்கிய பொக்கிசம் அமையத்தின் இலவச மாதிரி முன்னோடி வினாத்தாள்கள் அடங்கிய பொதிகளை பொக்கிசம் அமையத்தின் கல்முனை ஒருங்கிணைப்பாளர் எம்.என்.எம்.அப்ராஸ் மற்றும் கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினர் நூருல் ஹுதா உமர் ஆகியோரால் கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர்களிடம் வழங்கி வைக்கப்பட்டன.(05)

# மார்க்க விழுமியங்களில் பிசகாது எல்லாத் துறைகளிலும் பெண்கள் தங்கள் திறமைகளை பறைசாற்ற வேண்டும்!

## பதில் உபவேந்தர் மஜீட் தெரிவிப்பு





(நூருல் ஹுதா உமர்)

இன்றைய சூழலில் பெண்கள் தங்கள் திறமைகளை எல்லாத் துறைகளிலும் முன்னிலைப்படுத்தி வருகின்றனர். திறமைகளை அடையாளப்படுத்துவதில் பெண்கள் காட்டிவரும் அர்ப்பணிப்பு பாராட்டத்தக்கது. தங்களது மார்க்க விழுமியங்களில் பிசகாது பெண்கள் எந்தத் துறையிலும் முன்னேற முடியும் என்று தென்கிழக்கு பல்கலைக்கழக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் தமிழ் சங்கம் மற்றும் சமூகவியல் சங்கம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்த புத்தளம் புழுதிவயல் பைஸானா பைரூஸ் எழுதிய 'டுவன்டி ப்ளஸ் 20' கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு, கலை கலாசார பீடத்தின் கேட்போர் கூடத்தில் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தென்கிழக்குபல்கலைக்கழகபதில்உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதுதென்கிழக்குபல்கலைக்கழகத்தில் மட்டுமல்லாது ஏனைய நிறுவனங்களிலும் பெண்களின்பங்கேற்புஅதிகரித்துவருகின்றது. இவர்கள் பல்வேறு துறைகளில் தாங்களது திறமைகளைக் காட்டிவருகின்றனர். அந்த வகையில் இலக்கிய துறையில் கலை கலாசார பீடமாணவியானபைஸானாபைரூஸ்'டுவன்டி ப்ளஸ் 20' என்ற பெயரின் கவிதை நூல் ஒன்றை எழுதியுள்ளார். இவரது முயச்சியை பாராட்டாமல் இருக்க முடியாது. இவ்வாறான செயற்பாடுகளில் ஏனைய மாணவர்களும் தங்களது தடங்களைப் பதிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வுக்கு இலக்கிய அதிதிகளாக சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், பேராசிரியர் எஸ்.எம். ஐயூப், கலாநிதி எப். எச்.ஏ. ஷிப்லி மற்றும் விரிவுரையாளர் எம். அப்துல் றஸ்ஸாக் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

கௌரவ அதிதிகள் வரிசையில் புவியல் துறை தலைவர் கே. நிஜாமிர், பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரவியல் துறை தலைவர் எஸ். சந்திரகுமார், தகவல் தொழில்நுட்ப துறை தலைவர் எம்.எஸ். பாத்திமா பயாஷா ஆகியோரும் விஷேட அதிதிகளாக எம்.டி. தஸ்னீம் முகம்மட் (நளீமி), உஸ்தாத் மின்ஹாஜ் (இஸ்லாஹி), ஏ. மொஹம்மட் இன்ஷாப் மற்றும் ஜெ. மொஹம்மட் இஹ்ஷான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வரவேற்புரையை எஸ்.எம். சஹ்ரான் நிகழ்த்தினார். நூல் மற்றும் நூலாசிரியர் பற்றிய அறிமுகத்தை விரிவுரையாளர் எம். அப்துல் றஸ்ஸாக்கும் நூல் பற்றி சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் அவர்களும் உரையாற்றினர்.

இங்கு மூதூர் ஜெ.எம்.ஐ. பப்ளிகேஷனின் பணிப்பாளர் என். ஆஷா பாலின் நூலின் வெளியீட்டுரையை நிகழ்த்தினார். ஏற்புரையை நூலாசிரியர் பைஸானா பைரூஸ் நிகழ்த்தினார்.

கஸ்மிகா பாடல் ஒன்றை பாடிய அதே வேளை சபூரா அஹ்மத் பாதுஷா கவிதை ஒன்றை வாசித்தார். நன்றியுரை ஏ. பாத்திமா அம்னாவினால் நிகழ்த்தப்பட்டது.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.09.2024இல் வெளியிடப்பெற்றது